Arunodaya

# அருணோதயம்

අරුණෝදය

காலாண்டுச் சஞ்சிகை

ப ல் லி ன மா ண வ ர் க ரு த் து ப ரி மா ற ல் நி க ழ் ச் சி

ISSN 1800-2935






இன்னுமொரு பொழுது விடிந்தது. சூரிய ஒளி மெல்ல மெல்லப் படரத் தொடங்கியது. மேடு பள்ளம் சமவெளி என எல்லா இடங்களிலும் படர்ந்த ஒளி கண்களுக்கு இதமாக இருந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இனங்களுக்கிடையே சகவாழ்வுக்கான அடித்தளத்தை இடும் நோக்கில் ஏற்பாடு செய்த அனைத்து பாடசாலை மாணவர் கருத்து பரிமாறல் நிகழ்ச்சி மேடு, பள்ளம், சமவெளி என எல்லா இடங்களிலும் படர்ந்த சூரிய ஒளியைப் போலவே மாணவர் மனதில் கருணை, அன்பு, புரிந்துணர்வு ஏற்பட களம் அமைத்துத் தந்தது. ஒரு தோட்டத்தில் பூத்த அழகான மலர்களைப் போல பல பாடசாலைகளிலும் இடம்பெற்ற மூன்று நாள் செயலமர்வு, பாடசாலைப் பூமியை அழகு படுத்தியது.

CPA

சமூகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணோதயம்
காலாண்டு செய்தி மடல்

முதற் பதிப்பு ஜனவரி 2007

ISSN 1800-2943

நிழற்படங்கள் : சுப்புன் மதுசங்கேத

வடிவமைப்பு : லித்மா கிரப்பிக்ஸ்
தொலைபேசி 011-278377
மின்னஞ்சல் : lithma@sltnet.lk

அச்சுப் பதிவு : க்ளோப் பிரின்டிங் வோர்க்ஸ்
தொலைபேசி 011-2329739

வெளியீடு : மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
சமூகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவு

"அருணோதயம்" மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் வெளியீடாகும்.

பொதுமக்களுக்கான கொள்கைகள் தொடர்பான விவாதங்களுக்கு சிவில் சமூகத்தின் பங்கிளப்பு அத்தியாவசியமானதாகும். அதே சமயம் அதனை வலுவூட்டுவதும் அவசியமாகும் என்ற நம்பிக்கையுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உருவாக்கப்பட்டது. அது ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அரச நிர்வாகத்திற்கும் மற்றும் மோதல் தவிர்ப்பிற்குரிய பிரச்சினைகளுக்கும் தனது கவனத்தைச் செலுத்தும். இலங்கைப் பாடசாலைகளில உயர்தர வகுப்பு மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் அனைத்து இன மாணவர்களிடையே இடம்பெற்ற மாணவர் பரிவர்த்தனை முகாம்களில் பெறப்பட்ட அனுபவங்களின் ஒரு துளி "அருணோதயம்" என்னும இவ்வெளியீட்டின் வாயிலாக எடுத்துக் கூறப்படுகின்றது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்தாகவோ அதன் பணிப்பாளர் சபையின் கருத்தாகவோ அமைய மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
சமூகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டப்பிரிவு
32/7, ஃப்ளவர் வீதி, கொழும்பு - 07
தொலைபேசி : 011-2370801-4 தொலைநகல் : 011-2370802
மின்னஞ்சல் : cpa@cpalanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

மாணவர் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சியின் தோற்றம் 5

அழகிய மூன்று நாள் நினைவுகள் 7

பலதையும் பொறுத்துக் கொள்ளும் சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் 10

மஸ்கெலிய ப்ளும்பீள்ட் மகாவித்தியாலய வதிவிட முகாம் 11

பதுளை சார்னியா தமிழ் மகாவித்தியாலய மாணவர் முகாம் 22

ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி முகாம் 33

அம்பாறை கலஹிடியாகொட வித்தியாலய முகாம் 36

கண்டி கரகஸ்கட பாடசால முகாம் 39

குருணாகலை இந்து தமிழ் மகாவித்தியாலய முகாம் 41

அநுராதபுரம் வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்தியாலய முகாம் 42

அநுராதபுரம் சாஹிரா வித்தியாலய முகாம் 45

கிறுக்கல்கள் 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சகோதரத்துவத்தின் நினைவுகள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சியின் தோற்றம்

பலதையும் வரவேற்கும் சமூகக் கோட்பாட்டை விருத்தி செய்யவும் மாணவர் மத்தியில் சகவாழ்வை கட்டியெழுப்பவுமான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சியொன்று ஆகஸ்ட் மாதம் 27-31 வரை கண்டி டொபேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் 49 பாடசாலைகள் சார்பாக மேற்படி செயலமர்வில் கலந்து கொண்டனர்.

எதிர்கால சந்ததியினருக்குச் சரியான நோக்கை தோற்றுவிப்பதில், தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக ஆசிரியர்கள் மத்தியில் தெளிவான அறிவை பெற்றுக் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இச்செயலமர்வு வடிவமைக்கப்பட்டது.

இச்செயலமர்வின் வளப் பகிர்வாளர்களாக எஸ்.ஜி. புஞ்சிஹேவா, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, கலாநிதி ஆரியரத்ன அத்துகல, பேராசிரியர் காலிங்க டியூடர் டி சில்வா, கலாநிதி டி. நேசையா, கலாநிதி வீ. அமீர்தீன், சுனந்த தேசப்பிரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் கலந்து கொண்ட அனைத்து ஆசிரியர்களுமே யுத்தத்தை நிராகரிக்கும் நிலைபாட்டைக் கொண்டிருந்தார்கள். அத்துடன் அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் நியாயமான செயல்திட்டத்தின் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமெனவும் வலியுறுத்தினார்கள்.

பாடசாலைகளுக்கிடையே கோட்பாட்டு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தும் வழியாக மாணவர் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சியொன்றின் தேவை இங்கு உணரப்பட்டது. பலதையும் வரவேற்கும் மனித சந்ததியினரை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

செயலமர்வின் மூன்றாவது அமர்வில், எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை அடைய பயனுடைய நிகழ்ச்சி என்ன என்பது பற்றி ஆராயப்பட்டது. அதன்படி கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சியின் கீழ் மூன்று நாள் வதிவிட முகாமை நடாத்த இங்கு இணக்கம் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விணக்கப்பாட்டுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு :

## முதல் நாள் நிகழ்ச்சி

1. வருகையும் வரவேற்பும் பி.ப. 2.00

1.1. குறிப்பிட்ட பாடசாலை மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு முன்னதாக கலந்து கொள்ளும் பாடசாலை பெயர் பட்டியலும் கலந்து கொள்வோர் பற்றிய தகவல்களும் அடிப்படையில் வேலையாக அறிவிக்க வேண்டும்.

1.2. கலந்து கொள்வதற்கு முன்னதாகவே பேனா நண்பர்களாகவோ நண்பிகளாகவோ அவர்களிடையே உறவை கட்டியெழுப்ப முடியுமாயின் பயனுடையதாக இருக்கும்.

1.3 மாணவர்களிடையே முன் அறிமுகம் இல்லாத பட்சத்திலும் கடிதப் பரிமாறல் ஊடாக அவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

1.4. பாடசாலைக்கு வந்த பின்னர் ஒருவர் இன்னொருவரை வரவேற்பது பேனா நண்பர்களாக முன்னர் அறிமுகமாகி இருந்தவர்களே. சிலவேளை அதிதி மாணவர்களாகவோ மாணவிகளாகவோ இருவர் இருக்கலாம். ஆனாலும் இரண்டாவது பரிமாற்றத்திலும் ஒருவருக்கே கலந்து கொள்ள முடியும்.

2. வரவேற்பு

2.1 குறிப்பிட்ட இன, கலாச்சாரம் மற்றும் சமய வழிமுறைகளில் செய்யலாம்.

உதாரணம்: சிங்களப் பாடசாலையாக இருப்பின் வெற்றிலை கொடுத்து வரவேற்கலாம். தமிழ்ப் பாடசாலையாக இருப்பின் திலகமிட்டு மாலை அணிவித்து வரவேற்கலாம்.

இஸ்லாமியர்களென்றால் கைலாகு கொடுத்து "அஸ்லாமு அழைக்கும்" என வரவேற்கலாம்.

2.2. கலந்து கொள்ள வந்த மாணவர் மாணவியர்களை விடுதிகளுக்கு அழைத்துச் செல்லல்.

2.3 பிரதான மண்டபத்துக்கு வருகையும் தேநீர் விருந்துபசாரமும்.

3. அதிதிகளுடன் கூட்டத்தை நடாத்துதல்

4. அறிமுக நிகழ்வு

5. ஓய்வு நேரம்

6. அணித்தலைவர்களை நியமித்தலும் அடுத்து வரக்கூடிய நிகழ்ச்சிகளை தயாரித்தலும்

7. குறுந்திரைப்படம் பார்த்தல்

8. இரவு உணவு

## இரண்டாவது நாள்

1. நித்திரை விட்டெழுதல்
2. உடல் ஆரோக்கிய பயிற்சியும் முன்னைய நாள் நிகழ்ச்சிகளை மீட்டிப் பார்த்தலும்.
3. சமய வழிபாடுகள்
4. காலை உணவு
5. சிரமதானப் பணிகள்- உரிய சிரமதான பணியை மேற்கொள்வது பாடசாலையின் பொறுப்பு. அதற்கான உபகரணங்கள் தருவித்தலும் பாடசாலையின் பொறுப்பே ஆகும்.
6. தேநீர் வேளை
7. கள சுற்றுப் பயணம்
8. பகல் உணவு
9. விளையாட்டு ஊக்குவிப்பு
10. ஓய்வு
11. இராப்போசனம்
12. கலாச்சார நிகழ்ச்சிகள்

## மூன்றாவது நாள்

1. நித்திரை விட்டெழுதல்
2. உடல் ஆரோக்கியப் பயிற்சியும் முன்னைய நாள் நிகழ்ச்சிகள் பற்றிய மீளாய்வும்
3. சமய வழிபாடுகள்
4. காலை உணவு
5. ஞாபகார்த்த மரத்தை நாட்டுதல்
6. மாணவர் கோட்பாட்டு விருத்தி பற்றிய உரை
7. தேநீரும் ஓய்வும்
8. அணிகளாகக் கலந்துரையாடல்
9. கணிப்பீடும் மீளாய்வும்
10. விடைபெறும் நேரம்



அம்/ கலஹிடியாகொட கல்லூரியில் இடம்பெற்ற முகாமில் மாணவிகள் குதூகலிக்கும் காட்சி

# மலையகத்தின் குளிர்ச்சி

நடு இரவில் தோன்றும் நிலா ஒளிக்கு
வடக்கு, தெற்கு, மலையகம் என்ற பேதமில்லை.
உடலை குளிர்ச்சி அடையச் செய்யும்
தென்றலுக்கு இன பேதமில்லை.
உச்சியிலிருந்து விழும் மலையக நீர்வீழ்ச்சி
பள்ளம் மேடு என்ற பேதம் பார்க்காது.
இயற்கை எம் அனைவருக்கும் பொதுவானது
காற்றாய் முன்னோக்கிச் செல்வோம்.
நிலா ஒளியாய் இதமாயிருப்போம்.
ஆயுதமேந்தும் யுகத்துக்கு
முடிவு கட்டுவோம்.

**சந்தன புஷ்பகுமார**
அம்/உஹன மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பசறை தமிழ் மகா வித்தியாலய**

**அனைத்து மாணவர் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சி**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்பாடு செய்யும் அனைத்து இன மாணவர் கருத்து பரிமாறல் நிகழ்ச்சியின் கீழ் இடம்பெற்ற முதலாவது மாணவர் வதிவிட முகாம் இதுவாகும்.

அநுராதபுரம் ஹரிஸ்சந்திர பாடசாலை மாணவர் குழுவொன்று பசறை தமிழ் வித்தியாலயத்துக்கு அழைத்து சென்று அப்பாடசாலை மாணவ மாணவியர்களையும் அவர்கள் வசிக்கும் தோட்டச் சூழலையும் கண்கூடாகப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. மேலும் தமிழ் மாணவர்களுக்குத் தம்மை விட முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை வட்டத்தில் வளர்ந்த சம வயது மாணவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள களம் அமைப்பதும் இதன் நோக்கமாகும். இரண்டு இனங்களைச் சார்ந்த இம்மாணவர்களை பல குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை வழங்கியதன் மூலம் அவர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதும் தோட்டப்புற வாழ்க்கை நிலையை நேரில் காணச் சந்தர்ப்பம் அளிப்பதும் சமய மற்றும் கலாச்சார அடையாளங்கள் பற்றிய அறிவை புகட்டுவதுமாக பல்வேறு நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டன.



பஸ்ஸர த.ம.வித்தியாலத்தில் நடைப்பெற்ற முகாமின் போது அப் பாடசாலை மாணவர்களினால் சம்பிரதாயப்படி அ/ ஹரிஸ்சந்திர ம.வி. மாணவர்களை வரவேற்கும் சிலர்.

# அழகிய மூன்று நாள் நினைவுகள்

எப்போதும் போல மலையகத்தின் பனிக் கூட்டங்கள் ஒன்றை ஒன்று அனைத்து கொண்டிருக்க மலையகம் எங்கும் சூரிய ஒளி படரத் தொடங்கியது.

அநுராதபுரம் ஹரிஸ்சந்திர மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். அதற்கு முன்னர் எப்போதும் கேட்டிராத கண்டிராத சம வயது மாணவர்களை வரவேற்றதே அவர்களுக்குப் புதிய அனுபவமாக இருந்தது.

இந்து முறைப்படியே வரவேற்புகள் இடம்பெற்றன. அதாவது நெற்றியில் திலகமிட்டு வரவேற்கப்பட்டனர். வரவேற்பை அடுத்து தேநீர் விருந்துபசாரம்.

தேசிய கொடியும் பாடசாலை கொடியும் ஊவா மாகாணசபை தலைவர் மானெல் ரத்னாயக்க மற்றும் பசறை மகாவித்தியாலய அதிபர் ஆறுமுகம் ஆகிய இருவரின் கரங்களாலும் ஏற்றி வைக்கப்பட்டன. அதை அடுத்து சிங்களம் மற்றும் தமிழ் இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்பட்டன. ஊவா மாகாணசபை தலைவர் மானெல் ரத்னாயக்க, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் லயனல் குருகே மற்றும் அதிபர்கள் போன்றோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் விடயமாக சமய நிகழ்வுகள் இடம்பெற்றன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் லயனல் குருகே அவர்கள் சபையோரை வரவேற்று பேசியதுடன் நிகழ்ச்சியின் நோக்கங்களையும், தெளிவுபடுத்தினார். மானெல் ரத்னாயக்கவின் உரையை அடுத்து மாணவச் செல்வங்களின் திறமைகளை வெளிகாட்ட சந்தர்ப்பம் கிட்டியது.

அவர்கள் பாடிய பாடல்களாலும், கவிதைகளாலும் பாடசாலை சூழல் ரம்யமாகக் காட்சியளித்தது.

மாணவர் முகாமின் இரண்டாவது கட்டம் மாணவர்களின் உடற்பயிற்சியுடன் தொடங்கியது.

இரண்டாவது கட்டமாக குழுக்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் சுற்றுப் பயணமும் தொடங்கியது. பிற்பகல் 1.00 மணியளவில் பயணத்தை முடித்துக் கொண்டு மாணவர்கள் பாடசாலைக்குத் திரும்பினர். பகல் உணவை அடுத்து மாணவர்களுக்கு விளையாட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

மாலை நேரம் கலாச்சார செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. முகாமின் மூன்றாவது நாள் உடற்பயிற்சிகளுடன் தொடங்கியது. பாடசாலைக் கீதத்தைப் பாட அனைத்து மாணவாக்ளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இறுதிக் கட்டமாக லயனல் குருகே அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, முகாம்களில் தாம் பெற்ற அனுபவத்தை விபரிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

அனுபவங்களைக் கூறி முடித்த பின்னர் பசறை தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஆறுமுகம் அவர்கள் மொத்த நிகழ்ச்சியைப் பற்றி பாராட்டி பேசினார்.

மீளாய்வு உரை லயனல் குருகே அவர்களால் நிகழ்த்தப்பட்டது.



பசறை த.வித்தியால ஆசிரியைகளால் ஹரிச்சந்திர ஆசிரியைகள் வரவேற்க படுகின்றனர்.

## எமக்குத் தோன்றியவை

### எல்லோரும் நண்பர்களாகிவிட்டோம்.



நாம் இந்த மாதிரி பயணம் வந்த முதல் சந்தர்ப்பம் இது. எப்போதும் கண்டிராதவர்கள் என்ற போதிலும் இவர்கள் எல்லோரும் நண்பர்களாகி விட்டார்கள். இந்த முகாம் எமக்கு நல்லதொரு அனுபவம்.

**- கயான் இந்திக**

### விடைபெற முடியாதுள்ளது



நாம் வரும்போது அவ்வளவு விருப்பத்துடன் வரவில்லை. ஆனால், இப்போது இவர்களை விட்டுச் செல்ல மனம் இடம் கொடுக்க மறுக்கிறது. அந்தளவுக்கு இவர்களுடன் நண்பர்களாகி விட்டோம்.

**- விமுக்தி சேனாநாயக்க**

### பொறுப்பு



நாம் இவர்களுடைய வீடுகளை பார்க்கச் சென்றோம். வீடுகளுக்குப் பதிலாக சிறு அறைகளே இருந்தன. ஒரு அறையில் 9 பேர் இருந்தனர். அவர்கள் பெரும் துயரத்துடன் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது அரசின் பொறுப்பாகும்.

**பெதும் சாமர**

### பிரிவினை இல்லை



நேற்று நாள் முழுக்க நாம் இங்கு சுற்றிப் பார்த்தோம். எமக்கும் இவர்களுக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உண்டு. ஆனாலும் நாம் எல்லோரும் மனிதர்கள் என்பதால் பேதம் தேவையில்லை.

**- சஞ்சீவ சம்பத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பளம் போதாது



இவர்களின் பெற்றோர்களுக்குள்ள மிகப்பெரிய பிரச்சினை போதிய சம்பளமின்மையே. ஒரு நாளைக்கு 200 ரூபாவிற்குக் குறைவான சம்பளமே வழங்கப்படுகிறது. அதில் எவ்வாறு வாழ்க்கை நடத்துவது. அது பெரிய கொடுமை.

**- மனோஜ் சரத்**

## கல்வி அறிவு போதாது



நேற்று நாம் இம் மக்களின் வாழ்க்கை நிலையைக் கண்டோம். ஒரு குடும்பத்தில் பாடசாலை போகாத நான்கு சிறுவர்கள் இருந்தார்கள். இந்த மாதிரி முகாம்களுக்கு அவர்களையும் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருந்திருக்கும். அவர்களுக்கு கல்வி போய்ச் சேர வேண்டும்.

**- சமந்த விஜேசிங்க**

## கலாச்சாரத்தை அறிந்து கொண்டோம்



நாம் இவர்களின் கலாச்சாரம் பற்றி அறிந்து கொண்டோம். நாம் இவர்களுடைய இன்ப துன்பங்களை பகிர்ந்து கொண்டோம். நாம் அமினி தேயிலை தோட்டத்துக்கு சென்றோம். கதிரேசன் கோவிலுக்கும் சென்றோம். இந்து சமயத்தின் வழிபாட்டு முறைகளை அறிந்து கொண்டோம். இம்மக்கள் அடிமைகளாகவே வேலை செய்கிறார்கள். அவர்களின் உழைப்பு சுரையாடப்படுகிறது. இத்தகைய நிலையிலிருந்து அவர்களை விடுவித்து நல்ல வாழ்க்கை நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும்.

**- இசங்கா துலாஞ்சலி**

# எதிர்காலத்துக்கான திட்டங்கள்

ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர்
**கே.எம். ஜயசூரிய**

சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் சகவாழ்வுடன் வசித்து வரும் பிரதேசமாக பசறை பிரதேசத்தைக் குறிப்பிடலாம். அவ்வாறான பகுதியில் இவ்வாறான சிறந்த நிகழ்ச்சியை தொடங்கியமையை இட்டு சந்தோசமாக இருக்கிறது.

இலங்கையின் இளைஞர் யுவதிகளின் உழைப்பு திறனின் சரியான பயனை இன்னும் பெறுவதில்லை. அதற்காக தெளிவான நோக்குடன் எதிர்காலத்தைத் திட்டமிடல் வேண்டும். எதிர்கால அபிவிருத்தியின் அடிப்படைக் காரணியாக சிறுவர்கள் விளங்குகிறார்கள். அவர்களுக்குப் புத்தக அறிவுடன் பலதையும் வரவேற்பது போன்ற மனிதாபிமான குணாதிசயங்களை வளர்க்க இந்நிகழ்ச்சி ஒத்துழைப்பு நல்குகிறது. சமாதானத்தை தோற்றுவிக்க கல்வி உடன்படிக்கை மூலம் எடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கப் பூரண ஒத்துழைப்பை வழங்கலாம்.



பஸ்ஸர த.ம.வித்தியாலய முகாமில் அனைவரும் ஒன்று கூடி விளையாட்டில் பங்குபற்றும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலதையும் பொறுத்துக் கொள்ளும் சமூகத்தைத் கட்டியெழுப்புவோம்

சமூகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவின்
**லயனல் குருகே**

சில காலங்களுக்கு முன்னர் மொனராகல பிரதேசத்தின் பாடசாலையொன்றில் இடம்பெற்ற கருத்தரங்கில் பேசிக்கொண்டிருந்த நான் அம்மாணவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன்.

"உங்களுக்கு தமிழ் நண்பர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

நான் கேடட அந்த கேள்விக்கு நல்ல பதில் கிடைக்கவில்லை. அவ்விடயம் பற்றி நான் ஆழமாகச் சிந்தித்தேன். எமது நாட்டில் பல்லின மொழி மற்றும் கலாச்சார விழுமியங்களைப் புரிந்து கொள்வதற்கும் அதற்கு மதிப்பளிப்பதற்கும் சிறுவர் மனதில் உணர்வை ஏற்படுத்த வயது வந்தோர் முயற்சிப்பார்களானால் எதிர்கால சந்ததியினர் மோதல் நிலைக்கு தள்ளப்படுவதைத் தடுக்க முடியும் அல்லவா! என்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது.

இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதில் எனதோ நான் சார்ந்த நிறுவனத்தினதோ பங்களிப்பை விட ஆசிரியர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் என்ற ரீதியில் பலதையும் வரவேற்கும் பழக்கத்தை பாடசாலை காலத்திலேயே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து செயல்படும் சில மனிதர்களின் முயற்சியின் பங்களிப்பே முக்கிய காரணியாகும்.

சிறு வயதில் புகட்டும் நல்ல கோட்பாடுகள் அவர்கள் பழைய மாணவர்களான பின்னரும் தொடரும் என்பது எனது கருத்தாகும். தென் பகுதியைச் சேர்ந்த 99% மாணவர்களுக்கு தமிழ் பேசத் தெரியாது. இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமை இவ்விரு இனங்களுக்கிடையே சகவாழ்வை ஏற்படுத்துவதில் பெரும் தடையாக உள்ளது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரத்துவத்தை ஏற்படுத்த சிறு வயதிலிருந்தே அடித்தளமிட வேண்டும்.

இது மனிதாபிமானத்தை தேடிச் செல்லும் பயணமாகும். இந்த நாட்டின் எதிர்காலத்தை நீங்களே பொறுப்பேற்க உள்ளீர்கள். இந்த வதிவிட முகாம் வாழ்க்கையில் நீங்கள் கற்றுகொள்ள வேண்டிய பெறுமதிமிக்க பாடம் யாதெனில் மொழி மற்றும் சமயம் என்ற ரீதியில் மாறுபட்டாலும் நாம் அனைவரும் மனிதர்களே என்பதாகும்.

எம்மிடையே வேறுபாடுகள் உள்ளன. உடல் ரீதியான வேறுபாடுகளுடன் சமூக மற்றும் கலாச்சார ரீதியிலான வேறுபாடுகளும் காணப்படுகிறது. அவ்வேறுபாடுகளை பொறுத்துக் கொள்ளவும் வரவேற்கவும் அதற்கு மதிப்பளிக்கவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும். சிங்கள சிறார் தமது சிங்களத்தை விரும்புகின்றதைப் போலவே தான் தமிழ் சிறார்கள் தமிழை விரும்புகிறார்கள். முஸ்லிம் சிறுவர் முஸ்லிம் அடையாளத்தை விரும்புகிறார்கள். ஆகவே ஒரு இனத்தைச் சார்ந்த சிறுவர்கள் இன்னொரு இனத்தைச் சேர்ந்த சிறுவர்களை புறந்தள்ளக் கூடாது. அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அன்பு செலுத்த வேண்டும். புரிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் கள சுற்றுலாவில் தோட்டத்துறை வாழ்க்கை நிலை பற்றி பல விடயங்களை அறிந்திருப்பீர்கள். அவர்களுடன் சுமுகமான உறவு கூட ஏற்பட்டிருக்கலாம். அந்நிலை எதிர்காலத்திலும் தொடர வேண்டும். இச்செயலமர்வு முடியும் போது சிங்கள மாணவனொருவர் குறைந்த பட்சம் 50 தமிழ் நண்பர்களின் பெயர்களையாவது அறிந்து வைத்திருக்க வேண்டும். நாம் யுத்தத்தை நோக்கி சென்றதற்குக் காரணம் எம்மிடையே இருக்க வேண்டிய சகவாழ்வு நிலை இல்லாமல் போனதாகும்.

பலதையும் வரவேற்கும் தன்மை மூத்தோர்களிடமிருந்து விலகிச் சென்றுள்ளது. இங்கு கற்ற மனிதாபிமானத்தின் செய்தியை எல்லா பாடசாலைகள் ஊடாகவும் எல்லா ஊர்கள் ஊடாகவும் எல்லா இதயங்கள் ஊடாகவும் பரப்பக் கூடிய அதிர்ஷ்டம் உங்களுக்கு கிடைத்துள்ளது. அதனை நடைமுறைப்படுத்தும் பாக்கியம் எம் அனைவருக்கும் கிட்டட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்கெலிய ப்ளும்பீல்ட் மகா வித்தியாலய வதிவிட முகாம்

2006 அக்டோபர் 06

ஆவலுடனும் எதிர்பார்ப்புகளுடனும் மலர்ந்திருந்த ஆயிரமாயிரம் கண்கள் பாடசாலைக்கு வெளியே வீதி மீது படர்ந்திருந்தன. கணப்பொழுதில் மெல்லிய மழைத்துளிகள் நிலத்தை முத்தமிடத் தொடங்கின. சற்று நேரத்தில் கடுமையான வெயில். ப்ளும்பீல்ட் மாணவ மாணவியர்கள் தேனீ கூட்டத்தை போல் கூடி இருந்த வேளை குருநாகல் பகுதியிலிருந்து வந்த அவ்வாறானதொரு தேனீக் கூட்டம் ப்ளும்பீல்ட் பாடசாலை நோக்கி வருவதைக் காண முடிந்தது.

நேரம் மாலை 4.00 மணியாக இருந்தது.

அதற்கு முன்னர் வாசனை அறியாத ப்ளும்பீல்ட் பாடசாலை மண்ணில் குருநாகல் பாடசாலை மாணவர்களின் பாதம் படிந்த அந்த கணம் கண்களைத் கொள்ளை கொண்டது.




மஸ்கெலிய ப்ளும்பீல்ட் வித்தியாலய முகாமிற்கு வரும் எதுகல்புரவின் மாணவ மாணவிகளை ப்ளும்பீல்ட் வித்தியாலய மாணவ மாணவிகள் வரவேற்கும் தருணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாகல் பாடசாலை மாணவர்களுக்கு மலர், மாலைகள் அணிவிக்கப்பட்டன. அவர்களின் நெற்றியில் திலகமிடப்பட்டன. அத்திலகம் மாணவர்களின் பாசத்தை கோடிட்டுக் காட்டியது.

கொக்கரெல்ல மகாவித்தியாலய அதிபரும் மெதகம அதிபரும் தேசியக் கொடியை ஏற்றிய பின்னர் வதிவிட முகாம் நிகழ்வுகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது. சிங்களம், தமிழ் இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்பட்டன. சம்பிரதாயபூர்வமாக மங்கள விளக்கை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் லயனல் குருகே நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர், எஸ். சந்தனம் அம்பகமுவ பிரதேச சபை தலைவர் நகுலேஸ்வரன், ப்ளும்பீல்ட் தமிழ் மகாவித்தியாலய அதிபர் பரமேஸ்வரன், குருநாகல் இந்து வித்தியாலய அதிபர் சிவஞானம், மெல்சிரிபுர மதுமுல்ல மகா வித்தியாலய அதிபர், கொகரெல்ல வித்தியாலய அதிபர் ப்ளும்பீல்ட் தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் சரவணபவான் குமார், மஸ்கெலிய புனித ஜோசப் வித்தியாலய ஆசிரியர் சந்திரசேகரம், அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் சிவசுந்தரம், வீரகேசரி பத்திரிகை நிருபர் பீ. தங்கம், குருநாகல் மாவட்ட நிகழ்ச்சி இணைப்பாளர் சி. திலகா ஹேரத் மற்றும் இரண்டு மாணவர்கள் ஆகியோர் ஏற்றி வைத்தனர். வரவேற்புரையை அடுத்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் லயனல் குருகே நிகழ்ச்சியின் நோக்கத்தை தெளிவுபடுத்தினார். அதை அடுத்து ப்ளும்பீல்ட் வித்தியாலய அதிபர் பேசினார்.

அவர் கீழ்கண்டவாறு கூறினார்.

"உலக மதங்களின் பிரதான போதனை கருணை, அன்பு, பாசமாகும். நாம் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியதும் அதன் அடிப்படையிலாகும். நிலையான சமாதானத்தை அடைய திருமதி சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் சில முயற்சிகளை மேற்கொண்ட அதேவேளை மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் அவ்வாறான முயற்சியில் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகிறது. நாம் அந்த முயற்சிக்கு ஒத்துழைப்போம். நாட்டின் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்க ஒரே வழி சமாதான செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதாகும்.

"குருநாகலையிலிருந்து மஸ்கெலியாவுக்கு கிடைப்பதோ சோறு

மஸ்கெலியாவிலிருந்து குருநாகலைக்கு கிடைப்பதோ தேயிலை"

அவ்வாறு கூறி இரு பிரதேசங்களுக்கிடையேயுள்ள உறவை சுட்டிகாட்டி பேசியவர் புனித ஜோசப் வித்தியாலய ஆசிரியர் சந்திரசேகரன் அவர்களே. அனைத்து இனங்களையும் சார்ந்த சிறார்களுக்கு ஒற்றுமையின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டும் இவ்வாறான நிகழ்ச்சிகளை வரவேற்க வேண்டும் என மெதமுல்ல வித்தியாலய உப அதிபர் கூறினார். ப்ளும்பீல்ட் மகாவித்தியாலய ஆசிரியர் சரவணபவான் குமார் அங்குரார்ப்பண நிகழ்வின் நன்றி உரையை நிகழ்த்தினார்.

புதிதாக அறிமுகமான நண்பர் நண்பிகளுடன் அலவலாவும் நிகழ்வுடன் தேநீரை அருந்தவும் சந்தர்ப்பம் கிட்டியது.

அதனை அடுத்து மாணவர் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சி பற்றி மாணவர்களுக்கு அறிவுறுத்தும் பணி ரவிசந்திரலால் மற்றும் செந்தில் சிவஞானம் இருவரால் நடாத்தப்பட்டது. இராப்போசனத்துக்கு முன்னர் சிறார்களுக்கு பாடல் பாட சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதை அடுத்து அவ்விடமே களை கட்டியது. ஆசிரியர்களும் இசை வெள்ளத்தில் இணைந்து கொண்டனர்.

முகாமின் இரண்டாவது நாளின் முதல் அங்கமாக மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டனர். கள சுற்றுலா அதன் இரண்டாவது அங்கமாக இடம்பெற்றது. அதை அடுத்து பகல் உணவு அளிக்கப்பட்டது.




மஸ்கெலிய ப்ளும்பீல்ட் வித்தியாலயத்தில் இடம்பெற்ற முகாமில் கலாச்சார நிகழ்ச்சியில் ஈடுபட்டுள்ள ப்ளும்பீல்ட் மாணவியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ப்ளும்பீல்ட் மாணவியர்களின் நடனக் காட்சி



**குணசேகர குணசோம**
நாட்டார் பாடல் ஆராய்ச்சியாளர்

அதை அடுத்து குணசேகர குணசோம, செந்தில் சிவஞானத்தின் வழிநடத்தலில் இலங்கையின் மக்கள் இலக்கியம் பற்றிய அறிமுக நிகழ்வு இடம்பெற்றது. மக்கள் இலக்கியம் ஊடாக வெளிக்காட்டும் பல்லின உறவு பற்றி இங்கு கவனம் செலுத்தப்பட்டது. குணசேகர குணசோம பல நாட்டார் பாடல்களைப் பாடினார்.

தலையும் தலை முடியும் கித்துல் மலரை ஒட்டியது.
உடையும் நடையும் கிளியின் சொண்டை ஒத்தது.

வன்னியிலிருந்து வந்த பெண்ணா அவள்
இடுப்பில் வயிற்றில் கூந்தலில் இலட்ச பெறுமதி உடையவள்.
இடுப்பில் துணி இருந்தால் நாடளவு பெறுமதி
கடவுளே காப்பாற்று நான் கண்ட தமிழ் பெண்ணை

சேவலே பாய் கொண்டு வா
பாய் கொண்டு வா மகளே தண்ணி
கொண்டு வா
செம்பொன்றில் "தண்ணி" ஊற்றி தண்ணி
கொண்டு வா
தண்ணி கொண்டு வா மகளே தண்ணி
கொண்டு வா

பீங்கானில் "சோறு" போட்டு சோறு கொண்டு வா
சோறு கொண்டு வா மகளே சோறு கொண்டு வா
சுளகில் நெல்லி போட்டு சுளகு கொண்டு வா
சுளகு கெண்டு வா மகளே சுளகு கொண்டு வா

(குணசேகர குணசோமவின் பாணம்பத்தி நாட்டார் பாடல் புத்தகத்திலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல நாட்டார் பாடல்களை உதாரணமாக கொண்டு கலந்துரையாடியது, இனங்களுக்கிடையே கலாச்சார உறவு பற்றிய புதிய அனுபவத்தை மாணவர்களுக்குப் பெற்று தந்தது.

அதை அடுத்து பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இரவு 7.30 மணியளவில் ப்ளும்பீல்ட் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனங்களுடன் ஆரம்பமான கலாச்சார நிகழ்ச்சி கண்களுக்கு குளிர்ச்சியாக இருந்தது. வதிவிட முகாமின் மூன்றாவது நாள், பிரதான கூட்டம் நடைபெற்ற வேளை மாணவர் அணிகளுக்கு தமது கருத்துக்களை கூறச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.



## மகத்தான அனுபவம்

**சிந்தக விமலசேன**

எனது பாடசாலை வாழ்கையில் நான் பெற்ற மகத்தான அனுபவம் இது. தமிழ் முஸ்லிம் நணர்பர்களுடன் அறிமுகமாகக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பம்.



## கஸ்டமான வாழ்க்கை

**நிலுகா தமயந்தி**

தோட்டங்களில் வசிக்கும் மக்களின் கஸ்டமான வாழ்க்கையை நாம் கண்டோம். அவர்களுக்கு ஒரு நாளைக்கு 140 ரூபாவே ஊதியமாகக் கிடைக்கிறது. அதில் எப்படி தான் வாழ்வது என என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.



## மறக்க முடியாத அனுபவம்

**சமீர லக்மால்**

நாம் மனிதாபிமானத்தை பகிர்ந்து கொண்டோம். கூடி வாழ வேண்டிய முறையை நாம் கற்றுக் கொண்டோம். இந்த அனுபவத்தை எப்போதும் மறக்க முடியாது. அது வாழ்க்கைக்கு மிக முக்கியம்.



## சமாதானத்தை பெற்று தரும்

**ஷர்மான்**

பாலி ராஜா இந்த இரண்டு நாட்களில் எமக்கு நிறையச் சொல்லி கொடுத்தார். அதைப் போலவே எமக்கு விரைவிலே சமாதானத்தைப் பெற்றுத் தருவார் என நம்புகிறோம்.

மாணவர்களின் கருத்துரைகளை அடுத்து புனித ஜோசப் வித்தியாலயம் ப்ளும்பீல்ட் வித்தியாலயம், மெதமுல்ல மகா வித்தியாலயம் மற்றும் இந்த வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் ஆசிரியர்கள் சிலரும் குருநாகல பெண்கள் அபிவிருத்தி மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் திலக் ஹேரத் மற்றும் மாற்று கொள்கைகளுக்கான நிலையம் சார்பாக லயனல் குருகே அவர்களும் பேசினார்கள். அதை அடுத்து ப்ளும்பீல்ட் வித்தியாலயத்தை சேர்ந்த சரவண பவான் குமார் நன்றி உரையை நிகழ்த்தினார். நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வாக சமாதானப் பாடல்கள் இரண்டு பாடப்பட்டன.



ப்ளும்பீல்ட் வதிவிட முகாமில் விளையாட்டு நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருணாகல் பாடசாலை மாணவர்கள் ப்ளும்பீல்ட் மாணவர்களிடமிருந்து விடைபெறும் காட்சி

## நாம் முன் உதாரணமாக விளங்க வேண்டும்

அம்பகமுவ பிரதேச சபை தலைவர்
**நகுலேஸ்வரன்**



அம்பகமுவ பிரதேச சபை சிங்கள மற்றும் தமிழ் உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. கினிகத்ஹேன சிங்கள கிராம அபிவிருத்திக்கு 20 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனாலும், தமிழ் உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் தமிழ் கிராமங்களை அபிவிருத்தி செய்ய நிதி கிடைக்கவில்லை என்று எதிர்ப்பு தெரிவிக்க வில்லை. கிடைத்த நிதியை சிங்கள கிராமங்களின் அபிவிருத்திக்கு செலவிட நாம் ஆதரவு தெரிவித்தோம். ஆனால் சிங்கள உறுப்பினர்கள் இங்கு சிங்கள கிராமங்களுக்கு 10 இலட்சமும் தமிழ் கிராமங்களுக்கு 10 இலட்சமும் செலவிடுவது பற்றி கலந்துரையாடினார்கள்.

பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் இன, மத, குல பேதங்களின்றி ஒற்றுமையுடன் பணியாற்றுவதன் மூலம் மற்றைய பிரதேச சபைகளுக்கு முன் உதாரணமாக விளங்குகிறோம்.

பேதங்களை இல்லாதொழிக்க நேர்மையாகவும் நடைமுறை ரீதியாகவும் அர்ப்பணிப்புகள் தேவை. இம்மாணவர்கள் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சி ஊடாக சிறு வயதிலிருந்தே சிறுவர்களை அவ்வாறான சிந்தனைக்கு இட்டுச் செல்வது முக்கியமான தொடக்கம் என்றே தோன்றுகிறது.

## முன்னோடி முயற்சியாகும்.

ப்ளும்பீல்ட் தமிழ் மகா வித்தியாலய அதிபர்
**திரு. தேவராஜ்**



சமாதானத்தின் முன்னோடி செயல்பாடாக இச்செயலமர்வை நான் பார்க்கிறேன். உயரிய மனித சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக சிறுவர்களின் இதயங்களில் உண்மையான சமாதானம் பற்றிய கருத்தை ஏற்படுத்துவது காலத்தின் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூந்தோட்டத்தில் பல மலர்கள்

ஊவா மாகாணசபை தலைவர்
**மனெல் ரத்னாயக்க**



எம்மில் பலருக்கு தோட்டப்புற தமிழ் மக்களின் கலாச்சார, சமய மற்றும் வாழ்க்கை நிலை பற்றிய உண்மை நிலை தெரியாது. தோட்டப்புற தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கிடையே இடைவெளி உள்ளது. 25-30 வருடங்களாக இடம்பெறும் யுத்தம் ஏற்படுத்திய அழிவு சொல்லில் அடங்காது.

இலங்கை பல்லின, பலமத நாடாகும். அதனைப் புரிந்து கொள்ள முடியாமல் போனதே பல பிரச்சினைகள் தோன்ற வழி அமைத்தது. அந்தந்த இனங்களை சார்ந்த மொழி, மதம், கலாச்சாரம் பற்றிய புரிதலும் வரவேற்பும் குறைந்ததே அதற்குக் காரணம். எமது நாட்டில் இரண்டு பிரதான கட்சிகளுமே யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை தோற்றுவிக்க அரசியல் தீர்வின் தேவையை உணர்ந்துள்ளன. யுத்தத்தால் தீர்க்க முடியாததும் தொடர்ந்தும் மனித உயிர்கள் கொல்லப்படுவதும் உணரப்பட்டுள்ளன.

சில பௌத்த பிக்குகள் அரசியல் தீர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள போதும் பெரும்பான்மையான பௌத்த பிக்குகளின் கருத்து அது அல்ல.

புலிகள் அரசியல் இயக்கம் அல்ல. ஆனாலும் தற்போதைய நிலவரப்படி அவர்களுக்கு அடித்தளமொன்று கிடைத்துள்ளது. அவர்கள் கடும் போக்கு நிலைபாட்டுக்குச் சென்றுள்ளனர். இப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய ஒரே வழி எல்லா இடங்களினதும் அடையாளங்கள் பாதுகாக்க கூடிய அதிகாரப் பரவலாக்க தீர்வை ஏற்படுத்துவதன் மூலமாகும். தோட்டத்தில் ஒரே வகை மலர்கள் இருந்தால் அழகு இருக்காது. பல்வேறு மலர்கள் பூத்திருக்க வேண்டும். மனிதச் சமூகமும் அவ்வாறு தான்.

# மாணவர்களின் கருத்துக்கள்

## கருத்துக்கள் ஒன்றே

**ஷியாமலி தொளுவேகெதர**



இப்பகுதியில் எல்லா இன மக்களும் ஒற்றுமையாக இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. எம்மிடையே மொழி ரீதியான வேறுபாடுகள் இருப்பினும் கருத்துக்களில் ஒற்றுமை நிலை காணப்படுகிறது. இந்த சுமுக நிலை தொடரும் என நம்புகிறேன். இந்நிலை நாடெங்கும் இருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். பேனா நண்பர்களாக சரி எமது இந்த உறவை முன்னெடுப்போம்.

## இன்று தான் திலகமிட்டுக் கொண்டோம்

**ஷசினி பியகம**



நாம் பதுளைக்கு வந்தது செங்கடகலவிலிருந்து. ஆனாலும் தமிழர்களுடன் உறவாட பெரிதாக சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. எம்மில் பலருக்கு தமிழ் தெரியாது. ஆனாலும் தமிழ் மாணவர்கள் பலருக்கு மூன்று மொழிகள் தெரியும். நான் எப்போதும் திலகமிட்டதில்லை. இன்று அதுவும் நடந்தது. பனியில் மூடிய மலையகத்தின் அழகு இம்மக்கள் வாழ்க்கைக்குள் இல்லை. அவர்களின் வாழ்க்கை நிலையைக் கண்டோம். தமிழில் பேச எழுத எனக்கு விருப்பம். இவர்களுடன் தொடர்ந்தும் உறவு வைத்திருக்க ஆசை. யுத்தம் தோன்றக் காரணம் எமக்கு தமிழ் தெரியாமையே. தமிழர்களுக்கு சிங்களம் தெரியும். பிரச்சினை புரையோடிப் போக அதுவும் ஒரு காரணம்.

## துன்பவியல் கதை

**மிலிந்த உசித**



எமது அவதானிப்பில் நாம் கண்ட முக்கிய விடயம் அவர்களின் வாழ்க்கை துன்பங்களால் நிறைந்தது என்பதாகும். அவர்களுக்கு முறையான கல்வி அறிவு கிடைப்பதில்லை. கிடைக்கும் ஊதியம் போதாது. அவர்களிடம் பெற்ற அனுபவம் சிறப்பானது.

## சகோதரத்துவம்

**சாந்தனி ரத்னாயக்க**



அவர்கள் எம்மை சகோதரத்துவத்துடன் வரவேற்றார்கள். நல்ல விருந்துபசாரம் கிடைத்தது. எமக்கு தமிழ் புரியாது. ஆனால் அவர்களுக்கு தமிழ் சிங்களம் இரண்டும் புரியும். அவர்கள் இந்த பிரிவினையை ஆதரிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த அனுபவம்

**அயோதியா திலினி**



நாம் கண்டியிலிருந்து கஷ்டமான கிராமத்திற்கு வந்தோம். தெல்தொட்டையில் வாழ்ந்தாலும் நாம் தமிழர்களோடு நெருங்கிப் பழகி இருக்கவில்லை. இந்த இரண்டு மூன்று நாட்களில் ஒரு சில தமிழ் சொற்களைக் கற்றுக் கொண்டோம். இது மிகச் சிறந்த அனுபவமாகும். கவலைப்பட வேண்டிய பல விடயங்கள் இருந்தாலும், இச் சகோதரர்கள் தடைகளை தாண்டிச் செல்வது எமக்குச் சிறந்த அனுபவமாகும்.

## நீங்கள் எவ்வளவு திறமைசாலிகள்

**சமீரா**



எம்மை மனித நேயத்துடன் வரவேற்றனர். உங்களிடம் நிறைய மனிதத் தன்மை காணப்பட்டது. அதே சமயம் நீங்கள் எவ்வளவு திறமைசாலிகள் என்பதையும் நாம் புரிந்து கொண்டோம். வெளித் தோற்றத்தில் வித்தியாசம் இருந்தாலும் உள்ளத்தால் நாம் ஒன்றுபட்டோம். உங்கள் அறிவையும் மனப்பாங்கையும் நாம் மெச்சுகின்றோம்.

## பாரிய அனுபவம்

**சந்திகா குமாரி**



இது நான் பெள்ள பாரிய அனுபவமாகும். தமிழர் சிங்களவர் என்ற வகையில் எமக்கிடையில் உள்ள இடைவெளியைப் புரிந்து கொள்ளவும் அதனை இல்லாதொழிக்கவும் இது சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது. தங்குமட வசதி உணவு சிற்றுண்டி என்பன சிறப்பாக அமைந்திருந்தது.

## பாடல்களைப் பாடினோம்

**தர்ஷன குமார**



முதன் முறையாகவே வாழ்க்கையில் இவ்வபூர்வமான அனுபவங்களைப் பெற்றோம். செயலமர்வு நடைபெற்ற 3 நாட்களில் நாம் நித்திரை செய்யாமலேயே பாடடுப் பாடினோம். நாம் படித்த பாடல்களில் எதுவித பேதமும் இருக்கவில்லை. அனைவரும் ரசித்தனர். மற்றவர்களோடு உறவாட கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள எமக்குக் கஷ்டம் இருக்கவில்லை.

## அவநம்பிக்கை ஒழிந்தது

**சசிகா தில்ஹானி**



நாம் இங்கு வந்தபோது அச்சத்தோடு வந்தோம். தமிழ் பிள்ளைகளோடு எப்படி இருக்கப் போகின்றோம்? என்ற சந்தேகம் எமக்குள் இருந்தது. எமக்குத் தமிழ்மொழி தெரியாது. நாம் அனுபவங்களை எவ்வாறு பகிரப் போகின்றோம் என்ற பயம் இருந்தது. ஆனால், எம்மைவிட இவர்களுக்கு சிங்கள மொழி தெரியும். எனவே, எமது பயமும் அவநம்பிக்கையும் மறைந்துத. நாம் ஒரே தாயின் பிள்ளைகள் என்ற உணர்வே எமக்கு ஏற்பட்டது.



## முதற்படி

மடுள்ள கல்வி வலயப் பணிப்பாளர்

**சீ. குணரத்ன**

மடுள்ள கல்வி வலயப் பணிப்பாளர் ஆறு பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிறைய சிங்கள - தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் வருகை தந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. மடுள்ள பிரதேசத்தின் 22 பாடசாலைகளும் சிங்களப் பாடசாலைகளே. எனவே, இது விசேட அனுபவமாகும். எமக்கு தேசிய ஒருங்கிணைப்பிற்கும் சமாதானத்திற்குமென ஓர் அமைச்சு உண்டு. பயிற்றப்பட்ட அலுவலர்கள் உள்ளனர். அமைச்சுச் சுற்றறிக்கைக்கு அமைய நிகழ்ச்சிகள் அமுலாக்கப்படுகின்றன. பாடசாலை நட்புறவுச் சங்கங்கள் இத்துறையில் விசேடமானவை. ஆனால், எமது பிரதேசத்தில் சிங்களப் பாடசாலைகள் மாத்திரம் உள்ளமையால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை.

## பள்ளிப் பருவத்திலிருந்தே எனக்கு தமிழ் நண்பர்கள் இருக்கின்றனர்



**மொனராகலை மடுல்ல மகாவித்தியாலயத்தின் அதிபர்**

பாடசாலை வரலாற்றில் இனங்களுக்கிடையே ஐக்கியத்தை மேம்படுத்தும் முதல் நிகழ்வு இதுவாகும். எமது மொழி வேறுபட்டாலும் இதயங்கள் ஒன்றே. எனது பாடாலைப் பருவத்தில் பத்மநாதன், மொகமட் என்ற தமிழ்மொழி பேசும் நண்பர்கள் இரந்தனர். நாம் சிங்கள மொழிமூலம் கற்றோம். ஆனால் இன்றும் எமது உறவு தொடர்கிறது. நான் யாழ் பல்கலைக்கழகத்தில் கற்றபோது எனக்குப் பல நண்பர்கள் இருந்தனர். அன்றும் இன்றும் எமது நட்பு நீடித்துள்ளது. ஆனால், எம் சமூகம் இனத்துவத்தின் அடிப்படையில் பிளவுபட்டுள்ளது. நாம் இலங்கையர் என்பதை மறந்து செயற்படுகின்றோம். இந் நிலைமையை மாற்றியமைக்க இந்நிகழ்ச்சி பேருதவியா அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைகோர்த்துக் கொண்ட மனித நேயம்

## நடைபெற்ற இடம் - பதுளை சாரனியா மகா வித்தியாலயம்

திகதி - 2006 அக்டோபர் 27-29 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சார்னியா த.ம.வி. | 25 | 26 | 6 | 16 | 73 |
| ஹாலிஎல த.ம.வி. | 13 | 17 | 1 | 2 | 33 |
| ஸ்பிரீன்வெலி த.ம.வி. | 13 | 11 | 3 | 1 | 28 |
| கண்டி கரகஸ்கட நவோதா பாடசாலை | 50 | 50 | 7 | 3 | 110 |
| | | | | | |
| மா.கொ.நிலையம் சார்பாக | | | | | 10 |
| மற்றைய மாணவர்கள் மற்றும் இதர அதிதிகள் | | | | | 10 |
| மொத்தம் | | | | | 264 |

## நடைபெற்ற இடம் - கண்டி கரகஸ்கொட நவோதா பாடசாலை

திகதி 2007 பெப்ரவரி 02-04 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கண்டி கரகஸ்கொட பாடசாலை | 53 | 39 | 11 | 8 | 111 |
| ஹாலிஹெல தமிழ் வித்தியாலயம் | 13 | 17 | 1 | 2 | 33 |
| ஸ்பிரின்வெலி தமிழ் வித்தியாலயம் | 15 | 15 | 4 | 3 | 37 |
| சார்னியா தமிழ் வித்தியாலயம் | 22 | 14 | 5 | 4 | 45 |
| | | | | | 226 |
| மா.கொ. நிலையம் சார்பாக | | | | | 10 |
| மற்றைய மாணவர்கள் மற்றும் இதர அதிதிகள் | | | | | 40 |
| மொத்தம் | | | | | 276 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைபெற்ற இடம் - அ/வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்தியாலயம்

திகதி 2006 நவம்பர் 03-06 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அ/வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்தியாலயம் | 39 | 24 | 5 | 3 | 71 |
| ப/ லுனுகல தமிழ் வித்தியாலயம் | 28 | 19 | 4 | 2 | 53 |
| ப /பசறை தமிழ் வித்தியாலயம் | 31 | 35 | 6 | 1 | 73 |
| | | | | | 197 |
| மா.கொ. நிலையம் சார்பாக | | | | | 18 |
| மற்றைய மாணவர்கள் மற்றும் இதர அதிதிகள் | | | | | 30 |
| மொத்தம் | | | | | 245 |

## நடைபெற்ற இடம் ப /பசறை தமிழ் வித்தியாலயம்

திகதி - 2006 செப்டெம்பர் 22 - 24 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அ/வலிசிங்க ஹரிச்சந்திர வி. | 50 | 53 | 5 | 5 | 113 |
| ப/லுனுகல தமிழ் வித்தியாலயம் | 28 | 19 | 4 | 2 | 53 |
| பஸ்ஸர தமிழ் மகா வித்தியாலயம் | 31 | 35 | 10 | 5 | 73 |
| | | | | | 239 |
| மா.கொ.நிலையம் சார்பாக | | | | | 10 |
| மற்றைய மாணவர்கள் மற்றும் இதர அதிதிகள் | | | | | 5 |
| மொத்தம் | | | | | 254 |

## நடைபெற்ற இடம் அ/சாஹிரா வித்தியாலயம்

திகதி 2007 பெப்ரவரி 09- 11 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அ/சாஹிரா வித்தியாலயம் | 30 | 61 | 3 | 2 | 97 |
| அ/விவேகானந்த தமிழ் வித்தியாலயம் | 5 | 20 | 1 | 1 | 27 |
| கு/இந்து தமிழ் வித்தியாலயம் | 10 | 21 | 2 | 2 | 35 |
| மா.கொ. நிலையம் சார்பாக | | | | | 10 |
| மற்றைய மாணவர்கள் மற்றும் இதர அதிதிகள் | | | | | 45 |
| மொத்தம் | | | | | 254 |



அ/ ஹரிஸ்சந்திர ம.வித்தியாலயத்தில் நடைபெற்ற முகாமின் போது விளையாட்டில் பங்குபற்றும் மாணவ மாணவிகளில் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப்லும்பீல்ட் தோட்டத்தில் குருணாகல மாணவர்கள்

## நடைபெற்ற இடம் - மொனராகல மடுல்ல மகா வித்தியாலயம்

திகதி 2007 ஜனவரி 19-21 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அ/மடுகல மகா வித்தியாலயம் | 30 | 31 | 2 | 4 | 67 |
| அ/சாஹிரா வித்தியாலயம் | 18 | 28 | 2 | 2 | 50 |
| அ/விவேகானந்த வித்தியாலயம் | 5 | 13 | 0 | 2 | 20 |
| மொ/விபுலானந்த தமிழ் வித்தியாலயம் | 12 | 13 | 0 | 1 | 26 |
| மொ/பக்கினிகாவெல வித்தியாலயம் | 8 | 8 | 0 | 2 | 18 |
| ப/லுனுகல தமிழ் வித்தியாலயம் | 15 | 10 | 2 | 2 | 30 |
| | | | | | 211 |
| மா.கொ. நிலையம் சார்பாக | | | | | 10 |
| மற்றைய மாணவர்கள் மற்றும் இதர அதிதிகள் | | | | | 5 |
| **மொத்தம்** | | | | | **226** |

## நடைபெற்ற இடம் - நுவரெலிய/ ஹட்டன் ஹைலன்ட் கல்லூரி

திகதி - 2006 செப்டெம்பா 29 - அக்டோபர் 01 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நு /ஹைலண்ட்ஸ் கல்லூரி | 29 | 9 | 2 | 0 | 40 |
| நு/புலியாவத்த தமிழ் வித்தியாலயம் | 0 | 9 | 1 | 0 | 10 |
| நு/நோர்வூட் தமிழ் வித்தியாலயம் | 8 | 26 | 2 | 2 | 38 |
| அம்/கலஹிடியாகொடமகா வித்தியாலயம் | 28 | 8 | 3 | 2 | 41 |
| அம்/உஹன மகா வித்தியாலயம் | 23 | 10 | 3 | 2 | 35 |
| அம்/ரஜகலதென்ன மகா வித்தியாலயம் | 13 | 2 | 2 | 35 | |
| மா.கொ. நிலையம் சார்பாக | | | | | 10 |
| ஏனையோர் | | | | | 15 |
| **மொத்தம்** | | | | | **227** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைபெற்ற இடம் - நுவரெலிய மஸ்கெலிய ப்ளும்பீல்ட் தமிழ் வித்தியாலயம்

திகதி 2007 ஒக்டோபர் 06-98 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நு/ ப்ளும்பீல்ட் தமிழ் வித்தியாலயம் | 21 | 19 | 3 | 3 | 46 |
| நு/ சாந்த ஜோசப் தமிழ் வித்தியாலயம் | 21 | 11 | 1 | 1 | 34 |
| கு/ கொகரெல்ல மகா வித்தியாலயம் | 15 | 28 | 4 | 2 | 49 |
| கு/ மெதமுல்ல டி மெல் ம.வி. | 26 | 17 | 3 | 2 | 48 |
| கு/ இந்து தமிழ் வித்தியாலயம் | 13 | 9 | 2 | 1 | 25 |
| | | | | | 202 |
| மா.கொ. நிலையம் சார்பாக | | | | | |
| மற்றைய மாணவர்கள் மற்றும் இதர அதிதிகள் | | | | | 20 |
| **மொத்தம்** | | | | | **232** |

## நடைபெற்ற இடம் - குருநாகல் இந்து தமிழ் வித்தியாலயம்

திகதி 2007 பெ்ரவரி 23 - 25 வரை

| பாடசாலை பெயர் | பெண்கள் | ஆண்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நு/ ப்ளும்பீல்ட் தமிழ் வித்தியாலயம் | 24 | 19 | 7 | 4 | 54 |
| ப/ பஸ்ஸர தமிழ் வித்தியாலயம் | 20 | 26 | 4 | 2 | 52 |
| கு/ கொகரெல்ல மகா வித்தியாலயம் | 12 | 23 | 2 | 2 | 38 |
| கு/ மெதமுல்ல டி மெல் ம.வி. | 12 | 18 | 2 | 3 | 35 |
| கு/ இந்து தமிழ் வித்தியாலயம் | 9 | 10 | 1 | 1 | 21 |
| | | | | | 200 |
| மா.கொ. நிலையம் சார்பாக | | | | | 10 |
| மற்றைய மாணவர்கள் மற்றும் இதர அதிதிகள் | | | | | 20 |
| **மொத்தம்** | | | | | **230** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரவேற்கக் காத்திருக்கும் சார்னியா வித்தியாலய ஆசிரியர், மாணவிகள்

# பதுளை சார்னியா தமிழ் மகா வித்தியாலய
# மாணவர் முகாம்

நாள் 2006 அக்டோபர் மாதம் 27ந் திகதியாகும். மெல்லிய மழைத்துளிகள் விழுந்து கொண்டிருந்தன. கண்டி ஹரங்கட மகா வித்தியாலய மாணவர் குழுவொன்று சார்னியா மகா வித்தியாலயத்தை அடையும் போது மாலை 4.00 ஆக இருந்தது. பாடசாலையின் பேண்ட் வாத்திய குழுவினரால் தமது சக பாடசாலை குழுவினர் வரவேற்கப்பட்டனர்.

பதுளை மாணவர்கள் கண்டி மாணவர்களின் நெற்றியில் திலகமிட்டு அவர்களை வரவேற்றனர். ஊவா மாகாணசபை தலைவர் மானெல் ரத்னாயக்க அவர்களால் தேசிய கொடி ஏற்றபட்டது. அதேவேளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் லயனல் குருகே அவர்கள் அனைத்து இன மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சியின் உத்தியோகபூர்வ கொடியை ஏற்றினார். சிங்களம் மற்றும் தமிழ் இரு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்பட்டது. அதை அடுத்து மங்கள விளக்கேற்றும் பணி ஊவா மாகாண சபை தலைவர் மானெல் ரத்னாயக்க, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் முகாமையாளர் லயனல் குருகே, கரகங்கட மகா வித்தியாலயத்தின் அதிபர், சார்னியா தமிழ் மகா வித்தியாலய அதிபர், ஸ்பிரின்வெலி அதிபர், ஹாலிஹெல தமிழ் மகா வித்தியாலய அதிபர், நிகழ்ச்சி இணைப்பாளர் கௌமதி ரணவீர மற்றும் மாணவ மாணவியர் இருவர் ஆகியோரால் நிகழ்த்தப்பட்டது.

சார்னியா தமிழ் மகா வித்தியாலய மாணவரால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. அதை அடுத்து மும்மதங்களின் சமயத் தலைவர்களும் ஆசி உரை வழங்கினார்கள். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கிணைப்பாளர் லயனல் குருகே அவர்கள் நிகழ்ச்சியின் நோக்கத்தை தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்ச்சி மனிதாபிமானத்தைத் தேடிச் செல்லும் ஆய்வு நடவடிக்கை என கூறிய அவர் இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கு இதர இனங்களைச் சேர்ந்த நண்பர் நண்பிகள் இல்லாத குறை, இன ஒற்றுமைக்கு பெரும் தடையாக உள்ளதாக சுட்டிக் காட்டினார்.

நிகழ்ச்சியின் பிரதம அதிதி ஊவா மாகாண சபை தலைவர் மானெல் ரத்னாயக்கவின் உரை அடுத்ததாக இடம்பெற்றது.

"எமது நாடு பல்லின தேசம் என்பதை மறந்தது யுத்தம் ஏற்பட பிரதானக் காரணமாக விளங்கியது. எம்மிடையே காணப்படும் பல்லின தன்மையை புரிந்து கொள்ளும் முறையொன்று தேவை. நாம் மனிதர்கள் என்ற ரீதியில் ஒன்று என்றாலும் மொழி மற்றும் கலாச்சார ரீதியில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதனைப் புரிந்து கொண்டு அதை மதித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை பெற்று தர முன்வரவேண்டும். அதற்காக அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்டிருக்கும் இணக்கப்பாட்டை நாம் பலப்படுத்த வேண்டும்.

சார்ணியா வித்தியாலய அதிபரும் கரகஸ்கட வித்தியாலய அதிபரும் கூட நிகழ்ச்சி தொடர்பாக கருத்துத் தெரிவித்தனர். கருத்துரைகளை அடுத்து மாணவர் முகாமை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய விதிமுறையொன்று உருவாக்கப்பட்டது.

பாரம்பரிய தமிழ் நாடகக் கலைக்குரிய கூத்து நாடக முறை பற்றி தயாரிக்கப்பட்ட விவரண திரைப்படமொன்றைப் பார்க்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. இராப்போசணத்துக்கு முன்னதாக மாணவர்களுக்கு பாட்டுபாட சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

முகாமின் இரண்டாவது நாள் வழக்கம் போல தேக ஆரோக்கிய பயிற்சிகளுடன் தொடங்கியது. அதை அடுத்து குழுக்களாகக் களச் சுற்றுலாவில் ஈடுபட்டனர்.

கள சுற்றுலா முடிந்த பின்னர் பகல் உணவு உட்கொண்டனர். அதை அடுத்து நாட்டார் பாடல் பற்றி ஆய்வு செய்பவரான குணசேகர குணசோமவின் தலைமையில் நாட்டார் பாடல்களில் வெளிப்படும் பல்லின தன்மையும் கலாச்சார சகவாழ்வும் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதை அடுத்து விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இரவு 7.30 மணிக்கு கலாச்சார நிகழ்ச்சிகள் தொடங்கின. முகாமின் இறுதி நாள் மாணவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இதோ:



சார்னியா வித்தியாலயத்துக்கு வரும் கரகஸ்கட பாடசாலை மாணவர்கள்



சார்னியா வித்தியாலயத்துக்கு வரும் கரகஸ்கட மாணவிகள்



செங்கடகல ஆசிரியைகள் பதுளை ஆசிரியைகளுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போகத் தோன்றுகிறது



**பிரபாகரன்**

ஹரங்கட வித்தியாலயத்திலிருந்து எமது பாடசாலைக்கு வந்த சகோதர சகோதரிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் பாடசாலக்கு வர ஜனவரி மாதம் வரை பார்த்திருக்க வேண்டும் என்பதால் உங்கள் பஸ் வண்டியிலே ஏறிப் போகத் தோன்றுகிறது.

## அனைவரும் சமம்



**விஜய பிரபா**

எமது மொழி, கலாச்சாரம் பல தரப்பட்டது. ஆனால் மனிதர்கள் என்ற வகையில் எல்லோரும் சமம். பூனையில் பல நிற குட்டிகளை போன்றது. நாம் அனைவரும் கைகோர்த்தால் சமாதானம் தோன்றும்.



# ஆசிரியர்களின் கருத்துக்கள்

## இரு மொழிகளிலும் கல்வி



**சார்னியா வித்தியாலய முன்னாள் அதிபர்**

எனது ஆசிரியர் வாழ்க்கையில் இவ்வாறான பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். நாட்டின் எதிர்காலத்தை வளப்படுத்த இது உதவும் என நம்புகிறேன். 4 பாடசாலைகளுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்த இந்நிகழ்ச்சியால் முடிந்துள்ளது. சிங்களம், தமிழ் இரு மொழிகளிலும் பணியாற்றும் பாடசாலைகள் எமது நாட்டில் இருந்திருந்தால் இதை விட நன்றாக இருந்திருக்கும்.

## காலத்தின் தேவை



**ஹரங்கட மத்திய மகா வித்தியாலயம்**

நாம் கொடுத்து வைத்தவர்கள். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இம்முயற்சி காலத்தின் தேவை என்றே சொல்ல வேண்டும். சிறார்களின் இதயங்களிலிருந்து சமாதானத்தின் தேவை மிக அழகாக பதிந்திருப்பதை காண முடிந்தது.

## ஒரு தாயைப் போல அரவணைத்தார்கள்



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின்

**கௌமதி ரணவீர**

பாடசாலை அதிபர் ஒரு தாய் தனது குழந்தைகளை பார்ப்பது போல பார்த்து கொண்டார். விஷேடமாக தெல்தொட்டவிலிருந்து வந்த ஆசிரியரும் வசந்த குமார ஆசிரியரும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்கள். இந்நிகழ்ச்சி இந்தளவு வெற்றி பெறக் காரணம் இது உங்கள் நிகழ்ச்சியாக நீங்கள் மாற்றி கொண்டதால் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலஹிடியாகொட - பஸ்சறை மாணவர்கள்




சக மாணவர்களை வரவேற்க கலஹிடியாகொட மாணவர்கள் நடனமாடும் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹரிஸ்சந்திர முகாமின் களச் சுற்றுலா



அ/ ஹரிச்சந்திர வித்தியாலயத்தின் இசங்கா என்ற மாணவி சபையினரை வழிநடத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹைலன்ட்ஸ் கல்லூரி முகாமில் விளையாட்டு நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றுவதற்கு தயாராகவிருக்கும் மாணவர்கள்.



பசறை த.ம. வித்தியாலய மாணவர்கள் சக மாணவர்கள் வரும்வரை காத்திருக்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கரகஸ்கட வித்தியாலய முகாமில் மாணவர்கள் தேசிய கீதம் இசைக்கின்றனர்.




மஸ்கெலிய ப்ளும்பீல்ட் மாணவி கு/இந்து வித்தியாலய மாணவனை வரவேற்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உணவு உட்கொள்ளும் காட்சி



பசறை தமிழ் வித்தியாலயம் மற்றும் குருணாகல மாணவர்கள் குருணாகல இந்து வித்தியாலய கள சுற்றுலாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடுல்ல வித்தியாலய முகாமின் விளையாட்டு நிகழ்வு




மஸ்கெலிய ப்ளும்பீல்ட் வித்தியாலய முகாமுக்கு வரும் குருணாகல மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாஹிரா வித்தியாலய முகாமில் ஞாபகார்த்த செடியை நாட்டும் மாணவர்கள்



மஸ்கெலிய ப்ளும்பீல்ட் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வதிவிட முகாமில் மாணவர்கள் கள சுற்றுலா பற்றி அறுவுறுத்தப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாரனியா வித்தியாலய மாணவர்கள் சக மாணவர்களை வரவேற்கும் காட்சி




சாரனியா வித்தியாலய முகாமை முடித்துவிட்டு செல்லும் கரஸ்கொட மாணவி விடைபெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விருந்தினர்களான சக மாணவர்களை வரவேற்கவுள்ள ஹைலன்ட்ஸ் பேண்ட் வாத்திய குழு.

# ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி முகாம்

இம்முகாமை ஹைலன்ட்ஸ் கல்லூரி நோர்வூட் வித்தியாலயம் மற்றும் புலியாவத்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் நடாத்தின. உஹன மகாவித்தியாலயம், ரஜகலவத்த மகா வித்தியாலயம், மற்றும் கலஹிடியாகொட வித்தியாலயம் ஆகியவை இம்முகாமுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஹட்டன் ஹைலன்ட்ஸ் வித்தியாலயத்துக்கு வருகை தந்தவர்கள் அப்பாடசாலை மாணவர்களை திலகமிட்டு வரவேற்றனர். அந்நிகழ்வானது அதிதி மாணவர்களுக்கு புதிய அனுபவமாக இருந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூக நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் லயனல் குருகே, ஹட்டன் ஹைலன்ட் கல்லூரி அதிபர் மற்றும் அம்பாறை இனங்களுக்கிடையிலான நட்பு மன்றத்தின் தலைவர் புத்தி குணசேகர ஆகியோரால் தேசிய கொடியும் பாடசாலை கொடியும் ஏற்றப்பட்டன. மங்கள விளக்கேற்றி சமய அனுஷ்டானங்களை அடுத்து வரவேற்புரையை நிகழ்த்திய லயனல் குருகே நிகழ்ச்சியின் நோக்கத்தை தெளிவுபடுத்தினர்.

நாட்டின் பல்வேறு பாடசாலை மாணவர்கள் இவ்வாறு ஓரிடத்தில் சங்கமிப்பது ஒரு முக்கிய நிகழ்ச்சி என அவர் கூறினார். தொடர்ந்து பேசிய அவர், “ஒருவருக்கொருவர் சந்தேகத்துடனும் நம்பிக்கையற்ற முறையிலும் பார்க்கும், தேசிய பிரச்சினையொன்று காணப்படும் இந்நாட்டில் இவ்வாறான சந்திப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிர்வாதமாகும். பாடசாலை மாணவர்கள் என்போர் நாட்டின் எதிர்காலமாகும். எதிர்காலத்தை பொறுப்பேற்க உள்ளவர்கள் என்ற ரீதியில் தமக்குள் பல நற்பண்புகளை வளர்த்து கொள்ள வேண்டும். இதர மதங்களை மதிப்பதானது அதில் முக்கிய விடயமாகும். சிங்களம், தமிழ், முஸ்லிம் என பிரிக்காமல், பொது கோட்பாட்டுடன் சிறப்பான நோக்கை அடைவது இம்முயற்சியின் நோக்கமாகும்."

வரவேற்புரையை நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஆர். சத்தியசீலன் அவர்கள் நிகழ்த்தினார். ஹைலன்ட்ஸ் கல்லூரி அதிபர் முத்துகுமார் அவர்களும் கருத்துத் தெரிவித்தார். மாணவர் முகாமின் தன்மை பற்றிய விளக்கத்தை ரவி சந்திரலால் மற்றும் ஜகத் லியனாரச்சி ஆகியோர் வழங்கினர். சுத்தம், பொது சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் நேரத்துக்கு வேலை செய்தல் போன்ற விடயங்கள் இங்கு வலியுறுத்தப்பட்டன.

அதை அடுத்து தமிழ், சிங்கள மாணவர்களை உள்வாங்கும் வகையில் குழுக்கள் பிரிக்கப்பட்டு கள சுற்றுலாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தோட்டப்புற மக்கள் வாழ்க்கை நிலை பற்றி ஆய்வு செய்வதே அதன் நோக்கம்.

முகாமின் இரண்டாவது நாளானது வழமை போலவே உடற் பயிற்சியுடன் தொடங்கியது. காலை உணவு உட்கொண்ட பின்னர் பானம்பத்துவவின் நாட்டார் பாடல்களை மையப்படுத்தி அனைத்து கலாச்சார தொடர்புகள் பற்றிய ஆய்வொன்றை நாட்டார் பாடல் ஆராய்ச்சியாளர் குணசேகர குணசோம வழங்கினார்.

அவர் கீழ் கண்டவாறு தெரிவித்தார். பாணம்பத்துவ என்பது அனைத்து கலாச்சார தொடர்புகள் பற்றிய முன் உதாரணமான பிரதேசமாகும். சில சில வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் பிரதான மனிதக் கலவையாக செயற்படுகிறது. பல்வேறு இனங்களுக்கிடையே இடம்பெறும் திருமண உறவுகள் பாணம்பத்துவிலில் அதிகம் காணமுடியும்.

சிங்கள மற்றும் தமிழ் இரு மொழிகளையும் பேசும் திறன் அப்பகுதி சிங்கள, தமிழ் இரு தரப்பு மக்களுக்கும் இருக்கிறது. அங்கு மனிதாபிமான தொடர்புகள் முன் உதாரணம் மிக்கவை. கலாச்சார விழுமியங்களை பாதுகாப்பதில் பெரும் அர்ப்பணிப்பு காணப்படுகிறது. 1983 கறுப்பு ஜூலைக்கு பின்னர் தோன்றிய யுத்தம், காரணமாக இவ்வமைதி வாழ்க்கை பாதிப்படையத் தொடங்கியது.

உரையை அடுத்து பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மாலை வேளைகளில் கலாச்சார நிகழ்வுகள் இடம்பெற்றன. மூன்றாவது நாள் பாடசாலை பூமியில் இடம்பெற்ற சிரமதானப் பணியுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. நிறைவு அமர்வாக மாணவர்களுக்கு கருத்துக் கூறச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. கருத்துரைகளை அடுத்து பகல் உணவு உட்கொண்ட பின்னர் மூன்று நாள் முகாம் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



கள சுற்றுலா நிகழ்வின் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்கை வகுப்பாளர்களுக்கு பாடம்

மடுல்ல பிரதேச சபை தலைவர்
**சமன் பிரேமசிரி விக்கிரமசிங்க**



இப்பிரதேசத்தின் 99% மானோர் சிங்கள மக்கள். தமிழ், முஸ்லிம் மக்கள் குறைவு. நாட்டில் காணப்படும் யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த சிறார்களுக்கும் இந்த சிறார்களுக்கும் தாம் ஒரு தாய் மக்கள் என்று நினைக்க இது நல்ல களமாகும். நாட்டின் பிரச்சினைகள் தொடர்பாக கொள்கை வகுப்பாளர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றிய அனுபவமும் இதன் மூலம் கிடைக்கிறது. சிறார்களின் மனதில் ஒற்றுமையை தோற்றுவித்தால் எதிர்கால இலங்கை சிறப்பாகும். இப்பணிகளின் போது தடைகள் ஏற்படலாம். ஆனாலும் அதனை பொருட்படுத்தாமல் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

# மடுல்ல மாணவர்களின் கருத்துக்கள்

## சகோதர இலங்கை

**இளந்திரையன்**



எனது வாழ்க்கையில் இவ்வாறான அனுபவம் பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும். எம்மை சகோதரர்களாகப் பார்த்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். நாம் வாழ்க்கையில் புதியவற்றை சேர்த்து கொண்டோம். ஒற்றுமையே எமக்கு முக்கியம். நாம் சகோதர இலங்கையைக் கட்டியெழுப்புவோம்.

## கலாச்சார புரிந்துணர்வு

**எம். கண்ணதாசன்**



இரண்டு மாதங்களுக்கு முன்னர் சுற்றுப் பயணமொன்றுக்கு ஆங்கில ஆசிரியர் ஒருவர் என்னை அழைத்தார். அப்பயணம் பெறுமதி வாய்ந்த பயணமானது. எமது செயலமர்வின் போது நாமல்ஓய மக்களுடன் கதைத்தோம். அக்கிராமத்தின் கலாச்சாரம் பற்றிய புரிந்துணர்வு எமக்கு ஏற்பட்டது. அச்சந்தர்ப்பத்தை வழங்கியவர்களுக்கு நன்றி.

## கருணை

**சஹ்ராபானு**



நாம் சென்ற கிராமத்தில் மக்களுடனும் பிக்குகளுடனும் கருத்து பரிமாறிக் கொண்டோம். புத்த நெறியில் கூறப்படும் கருணை, அஹிம்சை போன்றவை அவர்களின் வாழ்க்கையிலும் இருந்ததைக் காண முடிந்தது.

## தொடரும்

**எம்.எச். அக்ரம்**



மூன்று நாட்களாக நெருங்கிப் பழகிய எமக்கு பிரிந்து செல்ல நேரிட்டது கவலைக்குரியது. ஆனாலும் எம்முள் ஏற்பட்ட ஒற்றுமை தொடரும்.

## பிரச்சினைகளை தீர்க்க முடியும்

**எச்.டபிளிவ் ஆனந்த**



எமக்கு இணைய சந்தர்ப்பம் கிட்டியது. இவ்வாறு எல்லா இனங்களுக்கும் இணைய முடியுமென்றால் எமது நாட்டில் பிரச்சினைகள் தீர்ந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணோதயம்

# அம்பாறை கலஹிடியாகொட வித்தியாலய முகாம்



கலஹிடியாகொட முகாமில் இரவு உணவு உட்கொள்ளத் தயாராகும் மாணவர்கள்.

## இங்கு யுத்தம் இல்லை

**பசறை பாடசாலை ஆசிரியர் இளந்திரையன்**



நாம் எமது பாடசாலையில் 3 நிகழ்ச்சிகளை நடத்தினோம். அதிபர் இதற்காக ஊக்கப்படுத்தினார். இந்நிகழ்ச்சிக்காக பல பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் வர இருந்தார்கள். ஆனாலும் யுத்த சூழ்நிலை காரணமாக பெற்றோர்கள் எதிர்த்ததனால் அவர்களால் வர முடியவில்லை. நாம் வந்த பின்னர் தான் இங்கு யுத்தம் இல்லை என்பதனை புரிந்து கொண்டோம்.

நாம் பல்லின இருப்பை மதிக்கும் மாணவ சமூகத்தை உருவாக்குவோம். எமது கிரிக்கெட் அணியை வெல்ல வைக்க நாம் அனைவரும் விரும்புகிறோம். அவ்வணியில் பல்வேறு இனங்களை மதங்களை சேர்ந்தோர் விளையாடு-கிறார்கள். அவ்வாறு எல்லா இனங்கள் பற்றியும் சிந்திப்பார்களானால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எல்லாப் பிரதேசங்களுக்கும் செல்ல வேண்டும்

**உப பொலிஸ் பரிசோதகர் - உஹன பொலிஸ் நிலையம்**

இனப்பிரச்சினைக்கு பின்னர் நாம் 35வது கொலனியில் வசித்து வந்தோம். இனங்கள் இரண்டு என்றாலும் நாம் நன்றாக உறவாடினோம். யுத்தம் காரணமாக நாம் மீள வரவேண்டியேற்பட்டது. தமிழ் மக்களே எமக்கு உதவினார்கள். பிரச்சினை ஏற்பட போகிறது உயிரைக் காப்பாற்றி கொள்ளுங்கள் என்று. அவ்வாறான சகோதர உறவு இருந்தது.

நாம் இலங்கையர்கள் என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல வேண்டும். பல்வேறு சக்திகள் எமது பிள்ளைகள் மத்தியிலே பேதங்களை ஏற்படுத்தலாம். ஆனாலும், எம்மால் பிரிந்து இருக்க முடியாது. இப்பிரதேசத்துக்கு வந்த பிள்ளைகள் புரிந்திருப்பார்கள் இப்பகுதி பிள்ளைகள் மோசமானவர்கள் அல்ல என்று. மனிதாபிமானம் மேலோங்கி இருந்தால் இனபேதம் ஏற்படாது. தமிழ் இனத்துக்கு நல்ல மனிதாபிமானம் இருக்கிறது. மோதல் வேளையில் தமிழ் மக்கள் வந்து "நீங்கள் எங்கேயாவது போங்கள். இல்லையேல் உங்களைத் தாக்குவார்கள்" என்று எமது தந்தைக்கு கூறியது இன்னும் என் நினைவில் இருக்கிறது.

குழந்தைகளின் மனதிலிருந்து இனவாதத்தை ஒதுக்குவது மிக முக்கியம். அரசாங்கம் முன்னின்று இவ்வாறான நிகழ்ச்சிகளை முன்னெடுக்க வேண்டும். ஆனாலும் சிலர் மோதலை அதிகரிக்க முயற்சிக்கிறார்களே அன்றி குறைக்க முயற்சிப்பதில்லை. அது கவலைக்குரிய நிலைமையாகும்.



## இல்லாமல் போன ஒற்றுமை

**வலய கல்வி பணிப்பாளர்**


இனங்களுக்கிடையே காணப்பட்ட ஒற்றுமை இல்லாது போனது. அவ்வாறு இல்லாது போன ஒற்றுமையை மீள ஏற்படுத்த முயற்சிக்கும் இவ்வாறான நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடிந்தது சந்தோசமான விடயமாகும். நுவரெலிய சிறார்கள் அரந்தலாவிற்கு வர தயாராக இருந்தாலும் மோதல் நிலை காரணமாக அவர்களால் வரமுடியாமல் போனது. அது கவலைக்குரிய விடயமாகும. ஆனாலும், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் இம்முகாமை ஏற்பாடு செய்தமை சிறப்பான செயல்பாடாகும்.



## முன்னோக்கிச் செல்லும் தொடர்பு

**வலயக் கல்விப் பணிப்பாளர்**

நாம் பலதையும் வரவேற்க வேண்டும். அதற்காக பல்வேறு இனங்களை சேர்ந்த சிறார்கள் மத்தியிலேயே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கியமை வரவேற்க வேண்டிய செயற்பாடாகும். இங்கு அறிமுகமான சிறார்கள் தமது தொடர்புகளை எந்தளவுக்கு முன்னெடுத:து செல்வார்கள் என்பதிலேயே இம்முயற்சியின் வெற்றி தங்கியுள்ளது.



சாரனியா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வதிவிட முகாம் நிறைவில் "ஆட்டோகிராப்" எழுதும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கருத்துக்கள்

## பல முன் உதாரணங்கள்



**ஆர்.எம். நவோதா**

தமிழ் சிறுவர்களின் வாழ்க்கை முறையில் பல முன் உதாரணங்களைப் பெற முடியும். வீடுகளில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், அவர்கள் வாழ்க்கைக்கு முகம் கொடுக்கிறார்கள்.

## யுத்தத்தை விரும்புவோர்களும் இருக்கிறார்கள்

**எம்.டி.சீ. புஷ்பகுமார**



நாம் இவ்வாறான நிகழ்ச்சிகள் மூலம் சிறந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தை இட வேண்டும். யுத்தம் பற்றிய விஷத்தை மாணவர்களின் மனதில் புகுத்துவதை நிறுத்த வேண்டும். நாம் யுத்தத்தை வெறுக்கிறோம். ஆனாலும், யுத்தத்தை விரும்புவோர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதில் தான் பிரச்சினை எழுகிறது.

## கோட்பாடு ரீதியான மாற்றம்



**ரொஷான்**

மக்களின் கோட்பாடுகளை மாற்ற இவ்வாறான நிகழ்ச்சிகள் மிக முக்கியம்

## பல பிறவிகளாகத் தொடரும்

**செவ்மினி**



எனக்கு இதற்கு முன்னர் தமிழ் நண்பர்கள் இருந்ததில்லை. இந்த நிகழ்ச்சி காரணமாக தமிழ் நண்பர் நண்பிகள் பலர் அறிமுகமானார்கள். இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய புத்திமான்களுக்கு நன்றிகள். நாம் நுவரெலிய நிகழ்ச்சிக்கு சென்றோம். அங்கும் தமிழ் நண்பர்கள் கிடைத்தார்கள். தமிழ் என்ற பேதம் எமக்கில்லை.

எம்மை அன்புடன் வரவேற்றார்கள். பாகுபாடு இல்லை. பல ஜென்மங்களாக தொடரும் பந்தத்தைப் போன்றது இது. இவ்வளவு தூரம் எம்மை நெருங்குவீர்கள் என எதிர்பார்க்கவில்லை. பசறை பாடசாலையுடன் இரண்டு பாடசாலைகள் வர இருந்தது. மற்றையவர்களுக்கு வரமுடியாமல் போய்விட்டது.

உண்மையிலே எமக்கு கவலை அளிக்கிறது. நீங்கள் எப்படியாவது வந்தீர்கள். எமது நாட்டில் வடக்கு தெற்கு பிரச்சினை உண்டு. நாம் விரும்பிய இடத்துக்குச் செல்ல முடியாதுள்ளது. ஆனாலும் நாம் மிக நெருக்கமானோம். இலங்கை முழுவதிலும் எனது சகோதர சகோதரிகள் தான் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

## ஒன்றாக இருக்க வேண்டும்

**புஷ்ப குமார**

நாம் அனைவரும் பேதமின்றி ஒரு தாய் பிள்ளைகளாக இருக்க வேண்டும். பசறை தமிழ் வித்தியாலய மாணவர்களுடன் நாம் பெற்ற அனுபவங்கள் மிகப் பெரியது.



ஒருவர் கீழே விழுந்து அழும்போது மற்றைய எல்லோருக்கும் துன்பம் தான். ஒருவர் சிரித்தால் மற்றவர்களுக்கும் சந்தோசமே. திரும்பவும் ஒருமுறை இவ்வாறு இணைய சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. நிறுவன ரீதியாக இல்லாவிட்டாலும் தனிப்பட்ட ரீதியிலேனும் இவ்வாறான சந்தர்ப்பங்களை உருவாக்கி கொள்ள வேண்டும். இனபேதமின்றி தாய் பிள்ளைகளாக இருக்க முடிந்தால் சிறப்பாக இருக்கும்.

## எமது மனது தூயது

**மஞ்சுளா தமயந்தி**

இப்போது எமக்கு பதுளை மற்றும் நுவரெலிய இரு மாவட்டங்களிலும் நண்பர்கள் உள்ளார்கள். எல்லா விடயங்களிலும் இனி எம்மால் இணைய முடியும். எமது மனது இன்னும் மாசடையவில்லை.



இப்போதிருக்கும் மூத்தோர்களின் கோட்பாடுகளை எளிதில் மாற்ற முடியாது. ஆனாலும், எமது வயதை ஒத்தவர்களின் கோட்பாடுகளை மாற்றலாம்.

இன, மத ரீதியில் பிரிந்திருந்தாலும், நாம் அனைவரும் ஒன்றே என்ற உணர்வு இந்நிகழ்ச்சி மூலம் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரகஸ்கொட வித்தியாலய முகாமை ஆரம்பித்து மாணவர்கள் உடற்பயிற்சி செய்கிறார்கள்.

# கண்டி கரகஸ்கட பாடசாலை முகாம்



## ஒரு தாய் பிள்ளைகள்

வெளிநாட்டு தொழில் முயற்சி அமைச்சின் மக்கள் தொடர்பு **செயலாளர் முஜாப்டீன்**

சிங்கள, தமிழ், முஸ்லிம் நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள். புராதன காலம் தொட்டு எமது சிங்கள மன்னர்கள், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நல்லாட்சியை நடாத்திய போதும் தற்போது எமது நாடு பிளவுபட்டுள்ளது. பாரிய யுத்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. எனது பெயருடன் தென்னெவலவ்வ என்ற சிங்கள பரம்பரை பெயரின் பகுதி உள்ளது. இது 40 வருடம் பழையது. முஸ்லிம்கள் என்ற ரீதியில் நாம் சிங்கள மக்களுடன் நல்ல ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறோம். ஆகவே, நாம் வன்முறைகளை ஆதரிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சகவாழ்வு இல்லாமல் போய்விட்டது

**பிரதேச தலைவர் சமன்**

இதற்கு முன்னர் இந்த பாடசாலையில் தமிழ், முஸ்லிம் மாணவர்களும் கல்வி கற்றுள்ளார்கள். ஆனாலும் இன்று அந்த நிலைமை மாறிவிட்டது. டீ.எஸ். சேனாநாயக்க அவர்கள் சுதந்திரத்தின் செய்தியை எடுத்துக் கொண்டு வரும் போது அவர் பொன்னம்பலம் இராமநாதனை அழைத்து வந்தார். அதிகமாக அவர்களே சந்தோசமடைந்தார்கள். ஆனால் இன்று தெற்கு மக்கள் மட்டுமே அந்த சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். சிங்களத்தின் இறுதி மன்னனின் உண்மையான பெயர் கந்தசாமி ராஜேந்திரன் என்பதாகும். ஆனாலும் சிங்களவர்கள் அவரை தமது மன்னராக ஏற்று கொண்டார்கள். இதன்படி நாம் காலம் காலமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்துள்ளோம். அந்நிலை மாறியமை கவலை அளிக்கிறது. ஆனால் இவ்வாறான நிகழ்ச்சிகள் மூலம் சமூகத்துக்கு புதிய செய்தி கிடைக்கிறது.



## மறைந்து போன பெறுமதி

**கலாநிதி அமீர்தீன்**

எனது பெயர் வெள்ளைத்தம்பி அமீர்தீன். இதற்கு முன்னர் சிங்கள- முஸ்லிம் உறவு பற்றி கூறப்பட்டது. நான் தமிழ் - முஸ்லிம் உறவுகள் பற்றி கூறுகிறேன். வடக்கு கிழக்கு நட்புறவுக்கு இன்று என்ன நடந்துள்ளது.

நாம், எம்மிடையே இருந்த ஒன்றை தொலைத்து விட்டுத் தேடுகிறோம். சுதந்திரத்தை கொண்டாடினாலும் எங்கே எமது சுதந்திரம்? எங்கே சுதந்திரப் போராட்டம்? இதற்கு பதிலை நீங்களே தேட வேண்டும். இன்று நாம் இட்ட அடித்தளத்தை எதிர்காலத் தலைவர்கள் என்ற ரீதியில் நீங்கள் முன்னெடுக்க வேண்டும்.




கரகஸ்கட வித்தியாலய முகாமில் கலந்துரையாடும் மாணவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கு/ இந்து வித்தியாலய முகாம் கள சுற்றுலாவில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் மாணவர்கள்.

# குருநாகல இந்து வித்தியாலய முகாம்



## காலத்தின் தேவை

வடமேல் மாகாண சபை இளைஞர் விவகார அமைச்சர்
**நிரஞ்சன் விக்கிரமசிங்க**

இவ்வாறான நிகழ்ச்சிளை நடத்துவது காலத்தின் தேவை. எமது நாடு இன்று முகம் கொடுத்துள்ள நிலைமைகளில் இவ்வாறான நிகழ்ச்சிகள் கட்டாய தேவையாகும். இவற்றை பல்வேறு கோணங்களில் பார்க்கலாம். எல்லா நல்ல நிகழ்ச்சிகளின் போதும் அவ்வாறான பிரச்சினைகள் தோன்றும். மனச்சாட்சி படி நடப்போமானால் அவ்வாறான சவால்களை வெல்லலாம்.

முஸ்லிம், சிங்கள மற்றும் தமிழ் குழந்தைகள் இவ்வாறு மூன்று நாட்கள் ஒற்றுமையுடன் இருந்தமையானது மிக முக்கிய விஷயம். மாகாண சபையின் இளைஞர் விவகார அமைச்சர் என்ற வகையில் எனக்கு இது புதிய அனுபவமல்ல. நாம் வசிக்கும் பிரதேசத்தில் தமிழ் தோட்ட தொழிலாளர்கள், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் ஒத்துழைப்புடன் வாழ்ந்து வருகிறார்கள். இன்றிருக்கும் இனப்பிரச்சினையை இதற்கு முன்னரே தீர்த்திருக்க வேண்டும். ஆனால் அதற்கான சரியான புரிந்துணர்வுடன் செயல்படாத கரணத்தால் தான் யுத்த சூழல் நாட்டில் ஏற்பட்டது. இப்பிரச்சினையை அரசியல் தீர்வு மூலமே தீர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹரிஸ்சந்திர வித்தியாலய முகாமின் கள சுற்றுலாவில் ஈடுபடும் பசறை வித்தியாலய மாணவர்கள்.

# அ/ வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்தியாலயத்தின் முகாம்





## பலதையும் பொறுத்துக் கொள்வதன் மூலம் ஐக்கிய இலங்கை

**மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**

இப்பாடசாலை மாணவர்களுக்கிடையே பலமான உறவு தோன்றியிருப்பதைக் காண முடிந்தது. இவ்வுறவு தொடர வேண்டும். பலதையும் மதிக்க வேண்டிய அவசியத்தை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள். இப்பண்பு எங்கும் எதிலும் இருக்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் பலதையும் மதிக்கும் ஐக்கிய இலங்கையை உருவாக்கிக் கொள்ள பலமான அடித்தளம் அமையும்.

## பசறை தமிழ் மகா வித்தியாலய அதிபர்

ஏதேனும் ஒரு காரியத்தை செய்வதானால் அதனை பாடசாலையிலிருந்தே தொடங்க வேண்டும் என நெப்போலியன் கூறியுள்ளார். இவ்வதிவிட முகாம் மூலம் மாணவர்களுக்கு யுத்தத்தின் கொடுமை பற்றிய அறிவு கிடைத்துள்ளது. நாட்டில் வறுமையையும் யுத்த பலத்தையும் இல்லாமல் செய்ய சிறு வயதிலிருந்தே உயரிய மனதை ஏற்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் படர்ந்த மலை உச்சியிலிருந்து பாயும் நீர் ஊற்று சிறு ஆறுகள் ஊடாக பாய்ந்து சென்று பெரும் ஆறுகளையும் கடந்து கடலை சென்றடைகிறது. ரஜரட்டை, வறண்ட பூமியில் நல்ல விளைச்சலை இந்த நீர் வளமே பெற்றுத் தருகிறது. மலையகத்தின் குளிர்ச்சியான இதயங்களுக்கும் ரஜரட்டையில் சூடான இதயங்களுக்கும் இடையே காணப்படும் பூகோள ரீதியான உறவு பாலம் உயிர்பெற்ற அந்த நாளும் தோன்றியது.

மாணவர் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சி அனுராதபுரம் வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்தியாலயத்தை வந்தடைந்த நாளே அது. அன்று மாலை அனுராதபுரம் வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்தியாலயத்தின் அனைத்து கண்களும் எதிர்பார்ப்புடன் இருந்த வேளை பசறை தமிழ் மகாவித்தியாலயத்தினதும் லுனுகல ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயத்தினதும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை வளவை வந்தடைந்தார்கள்.

தேசியக் கொடி, சமூக மையத்தின் கொடி மற்றும் அனைத்து இன மாணவர் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சியின் கொடி ஏற்றப்பட்ட பின்னர், வலிசிங்க ஹரிஸ்சந்திர மாணவர்கள் விருந்தினர்களாக வந்த சக மாணவர்களை இனிதே வரவேற்றனர்.

சமய அனுஷ்டானங்களை அடுத்து மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் லயனல் குருகே நிகழ்ச்சியின் நோக்கங்களை தெளிவுபடுத்தினார்.

அனுராதபுரம் வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரையை அடுத்து திரைபடத்தை பொறுப்பேற்கும் சந்தர்ப்பம் சிறுவர்களுக்குக் கிட்டியது.

இரண்டாவது நாள் செயலமர்பு வழமைபோலவே உடற்பயிற்சியுடன் தொடங்கியது. காலை உணவை அடுத்து கள சுற்றுலாவுக்காக மாணவர்கள் அனுப்பப்பட்டனர். அதன்படி குகுலேவ, ரொடவெவ, கட்டுபொத்த, அசோகபுரம், ரம்பாவ வாவி மற்றும் யாயதெக போன்ற பிரதேசங்களுக்கு சென்று அங்கு மக்களின் வாழ்க்கை முறை பற்றி மாணவாக்ள் ஆராய்ந்தார்கள்.

மீண்டும் பாடசாலை திரும்பிய பின்னர் பகல் உணவு வழங்கப்பட்ட அதேவேளை அதை அடுத்து நாட்டார் பாடல் ஆராய்ச்சியாளர் குணசேகர குணசோம அவர்களின் தலைமையில் நாட்டார் பாடல்கள் ஊடாக பல்லின அடையாளங்களை அறிந்து கொள்ளும் நிகழ்ச்சி இடம்பெற்றது.

படைப்பியல் திறன் கொண்ட 30 மாணவர்களுக்கு சிறு பத்திரிகை கையேட்டை (News Letter) வடிவமைப்பது பற்றிய செயலமர்வு இடம்பெற்றது. சி.தொடாவத்த, ரசிக்க மனோபுத்தி மற்றும் ரவி சந்திரலால் ஆகிய ஊடகவியலாளர்களால் இச்செயலமர்வு வழிநடத்தப்பட்டது.

அதை அடுத்து பகல் 2.30 மணியளவில் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் மாணவர்களுக்குக் கிட்டியது. விளையாடி கலைப்படைந்த மாணவர்களின் மனதையும் உடலையும் இதமாக்கிக் கொள்ள நுவரவாவி ஆற்றில் குளிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மாலை 6.30 மணியளவில் கலாச்சார நிகழ்வுகள் தொடங்கியது. அந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்க வந்த அதிதிகள் பாடசாலை பேண்ட் வாத்தியக் குழுவினரால் வரவேற்கப்பட்டனர்.

வதிவிட முகாமில் கலந்து கொண்ட அனைத்து பாடசாலை மாணவர்களினதும் கலைத் திறனை வெளிக்காட்ட இதன் மூலம் நல்ல சந்தர்ப்பம் கிட்டியது.

மூன்றாவது நாளும் கூட உடற்பயிற்சிகளுடன் தொடங்கியது. அதை அடுத்து கள சுற்றுலா பற்றிய குறிப்புகளை மாணவர்கள் எழுதினார்கள். ஞாபகார்த்த மரத்தை நாட்டிய பின்னர் அனைவரும் பிரதான மண்டபத்தில் கூடினார்கள். மாணவர் குழுக்கள் தமது கள சுற்றுலா பற்றிய அனுபவங்களையும் அவதானிப்புகளையும் முன் வைத்தனர்.

மூன்று நாள் வதிவிட முகாமின் இறுதி கட்டமும் நெருங்கியது. சமய அனுஷ்டானங்களை அடுத்து சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்பட்டது. முகாம் பணிகள் நிறைவுபெற்றன.



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறப்பான நிகழ்ச்சி

**ஹரிஸ்சந்திரக வித்தியாலய பிரதி அதிபர்**

இவ்வாறான சிறப்பான நிகழ்ச்சி எமது பாடசாலைக்கு கிடைக்க சிங்கள பாட ஆசிரியர் உபுல் திலகரத்னவே முன்நின்று உழைத்தார். நான் ஓய்வு பெறும் தருவாயில் இருக்கிறேன். இந்த மாதிரியான உயர்ந்த நிகழ்ச்சியை இதற்கு முன்னர் என்னால் செய்ய முடியாமல் போனதே என்ற வேதனை இருக்கிறது. ஆனாலும் இந்த வகையிலேனும் பங்களிப்பு வழங்க கிடைத்தமை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நீயே எமது உலகம் மகளே மகளே
சூரியனும் சந்திரனும் கூட நீயே
அறிவாலும் பண்பாலும் உயர்ந்திடு
இல்லையேல் எமக்கு எதிர்காலம்
இல்லாமல் போய்விடும்



## சகோதரத்தின் பிணைப்பு

**நிசங்கா துலஞ்சலி**

தமிழ் சகோதர சகோதரிகளை நாம் இனிதே வரவேற்கிறோம். இந்த உணர்வை வார்த்தையால் கூறிவிட முடியாது. பதுளை பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை பற்றி இதற்கு முன்னர் நாம் அறிந்திருக்கவில்லை. இந்த நிகழ்ச்சி மூலம் அது நிறைவேறியது. தோட்டத்தில் லயன் அறைகளில் வசிக்கும் மக்கள் படும் துன்பம் பற்றி நாம் கவலை அடைகிறோம். நாம் அந்த துன்பத்தை எமது துன்பமாக மாற்றிக் கொண்டோம்.

தோட்டப்புறத்திலிருந்து நீங்கள் எமது பாடசாலைக்கு வந்தது ஒரு அழகான அனுபவம். பதுளையில் நீங்கள் வாழும் அவல வாழ்க்கையை கண்டி பகுதி மக்களும் வாழ்ந்து வருகிறார்கள் என்பதனை எமது கள சுற்றுலாவில் அறிந்து கொண்டோம். பசறை தோட்ட மக்களுக்கு தண்ணீர் "பைப்கள்" போடப்பட்டிருந்தாலும் நீர் இல்லை. ஆனால் கண்டிப் பகுதியில் நாம் கண்ட மக்களுக்கு தண்ணீர் "பைப்களே" இல்லை. தண்ணீரும் இல்லை. அவர்கள் தண்ணீர் தேடி பல மைல்கள் அலைகிறார்கள். மாணவர்களுக்கு பாடசாலை செல்ல வசதி இல்லை. பெற்றோர்களுக்கு சரியான தொழில்களும் இல்லை.

உங்களுக்கென்றால் எதிர்பார்ப்பாவது இருக்கிறது. இவர்களுக்கு அதுவும் இல்லை. யுத்தத்தாலும் அல்லல் படுகிறார்கள். ஆகவே, எம் மத்தியில் தோன்றிய சகோதரத்துவ பிணைப்பு எத்துணை துன்ப நிலையிலும் கூடத் தொடர்ந்து இருக்க வேண்டும்.



அனுராதபுர குகுலேவ முகாமில் கள சுற்றுலா நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ/ சாஹிரா வித்தியாலய முகாமில் கலாச்சார நடன நிகழ்வு.

# அனுராதபுர சாஹிரா வித்தியாலய முகாம்



## மிக உயர்ந்த நிகழ்ச்சி

**வடமத்திய முதலமைச்சர் பர்டி பிரேமலால் திசாநாயக்க**

வடமத்திய மாகாண கல்வி அமைச்சர் என்ற ரீதியிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இன மாணவர்களுக்கு சிறப்பான கல்வியை பெற்றுத் தருவதே எனது பொறுப்பாகும். அப்பணியில் இவ்வனைவரையும் சமமாக மதித்தே நான் செயலாற்றி வருகிறேன்.

இம்மாணவர்களுக்கு தமது அனுபவங்களை பரிமாறிக் கொள்ளவும் சகவாழ்வை ஏற்படுத்திக் கொள்ளவும் கிடைத்த இந்த சந்தர்ப்பம் அவர்கள் பெற்ற பாக்கியமாகவே நான் கருதுகிறேன். ஆகவே இந்நிகழ்ச்சிக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிறுக்கள்கள்

## அழகு

மலையக வாழ்க்கை கடினம்ானது
நாம் பெற்ற அனுபவமோ அதிகம்.
**K.C.C. Boys**

## எதிர்பார்ப்பு

வாழ விருப்பம்
எப்போதும் இவ்வாறு
**K.C.C.**



நட்பின் தூரம்

## மறக்க முடியாத நினைவுகள்

தமிழ் நண்பர்களே உங்களின்
பாசத்தைப் புரிந்து கொண்டோம்
கடந்த மூன்று நாட்களில் பெற்ற
அனுபவங்கள் மாறாத நினைவுகளாக
இருக்கும்.
**சுனில் K.C.C.**

## நிலையான அமைதி

கொடூரமான யுத்தம் முடிவுக்குக்
கொண்டு வரப்பட்டு
நிலையான சமாதானம் தோன்ற
பிரார்த்திப்போம்
வஜிரா
**12 கலை K.C.C.**



கிறுக்கல்கள்

## வானத்தின் நட்சத்திரங்கள் போல

கடலில் அலையைப் போல
நட்பு தொடரும்
உலகில் எந்நாளும்
**சமன் K.C.C.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறுக்கள்கள்

## பதுளை சர்னியா பாடசாலை

குளிர்காற்று புயலுடன் மோதும் போது
பறவைகளின் இசை கேட்கும் போது
ஒரு சோலையில் பூத்த மலர்களைப் போல
ஒன்றாக இருந்து கழிக்கும் இந்த
முகாம் வாழ்க்கை எத்தனை அழகு?
சந்தித்த தோழர்களே தோழிகளே
உங்களைப் பற்றிய நினைவுகள்
நீங்காதிருக்கும்.



அ/ வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்தியாலய முகாமில் ஞாபகார்த்த குறிப்பு

## புறாக்கூட்டம்

பேதமின்றி புறாக்கூட்டத்தை போல
சிறகடிப்போம்
K.C.C.

## கங்கை

கங்கை நீரைப் போல முன்னோக்கிச்
செல்வோம்
K.C.C. Boys

## பொறுப்பு

ஒற்றுமையே பலம்
அதனைக் காப்பது எமது பொறுப்பு
**லக்மாலி**
(MO/B/S/K/V)



சகோதர அன்பின் அடையாளம்

## ஒரே வழி

பூக்கத் துடிக்கும் மொட்டுக்களை ஒத்த
எமக்கு இன மத பேதம் என்ற
பிசாசிடமிருந்து
விடுபட உள்ள ஒரே வழி சமாதானப்
பாதையில் செல்வதே
**நிலுகா**
மொனராகல மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறுககள்கள்

## தோற்றவர்கள்

யுத்தத்தால் தமிழ் சகோதர
சகோதரிகளின்
உயிர்கள் பறிக்கப்படுமானால்
சிங்கள சகோதர சகோதரிகளின்
உயிர்கள்
பறிக்கப்படுமானால் அது அவர்களின்
வெற்றியா? இல்லை...
இறப்பவர்கள் இலங்கை சகோதர
சகோதரிகள் அல்லவா
அவ்வாறென்றால் நாம் அனைவரும்
தோற்றவர்கள் இல்லையா!

## வாசனை

மலர்கள் கைகோர்த்து
உலகை சுகந்தப்படுத்தும்

**சுஜானி, உபேக்ஷ, அயேஷனி**
10-2



கிறுக்கல்கள்

## வசந்தம்

வறட்சி வந்து வாழ்க்கையின்
வசந்தத்தை திருடிக் கொண்டு
துன்பத் தீயை மூட்டினாலும்
முகத்துக்கு சிரிப்பு வாழ்க்கைக்கு புதிய
உதயமும் எமக்கு கிடைத்தது
இந்த சந்திப்பில்

**சிரிதரன் பிரதீப்**
**மனோ - லோகா**
ஆண்டு 4
P.I.M.V (N.S)

## ஒரு படி

யுத்தம் என்ற தீயின் சுவாலை மேலெழ
சிறுவர் எமது மனதும் அதில் காயமுற
தமிழ் சிங்கள இனங்களைப் பிரித்து
எவ்வாறு இந்த தீ பற்றியது
இனிமேலாவது இப்பூமியை சாந்தப்படுத்த
ஒரு படி எடுத்து வைப்போம்

**தர்ஷிகா சுதர்ஷினி**
**குசும் கல்ஹாரி**
**தினிஷா ரோஷினி**
ஆண்டு 12
உஹன மகா வித்தியாலயம்



விடைபெறுவதற்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறுக்கள்கள்

## மின்ன வைப்போம்


இன பேதங்களுடன் சண்டை இட்டதாலேயே
இறந்த காலம் வேதனை மிகுந்த கண்ணீர் கதையானது
அக்கதையை இறந்த காலத்துக்கு விட்டு
விட்டு நிகழ்காலத்தை மின்ன வைப்போம்
**ஜனக துஷித பண்டார**
அம்/ கலஹிடியாகொட ம.வி.

## மலைநாட்டுக் குளிர்

நடு இரவில் தோன்றும் நிலா ஒளி
வடக்கு, தெற்கு, மத்தி என்று பேதம் பார்க்காது
மனதை இதமாக்கும் தென்றலோ
இனபேதம் பார்ப்பதில்லை
மலை உச்சியிலிருந்து விழும் நீரூற்று
மேடு பள்ளம் சமவெளி பார்ப்பதில்லை
இயற்கை எம் அனைவருக்கும் பொதுவானது
காற்றாய் முன்னோக்கிச் செல்வோம்
நிலா ஒளியாய் இதமாயிருப்போம்
ஆயுதமேந்தும் யுகத்துக்கு
முடிவு கட்டுவோம்
**சந்தன புஷ்ப குமார**
அம்/உஹன மகாவித்தியாலயம்

## ஒரு நாளும் வாடாது

இதமான சோலையில் பூத்த பூக்களை
தேடி வந்த பயணத்தில்
மனதுக்கு இதுவரை கிடைக்காத
பாசம் உங்களிடமிருந்து கிடைத்தது
வானமே எல்லையென்று
முகாம் அமைத்து
இரண்டு நாட்கள் கடந்து விட்டது.
விடை கொடுங்கள் சகோதர
சகோதரிகளே உங்கள்
பாசம் என் மனதில் என்றும்
இருக்கும். ஒரு நாளும் வாடாது
**அனுஷா நிலோமி**
அம்/ரவிகலதென்ன ம.வி.



சார்னியா வித்தியாலய முகாமில் நினைவு வரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறுக்கள்கள்



விடைபெறுவதற்கு முன்னர்

## வாழ்க்கைக்கு பலம்

எதிர்பார்த்த எல்லாமே எதிர்பாராத
விதமாக கனவாகிப் போனதே
முகத்தில் தோன்றும் சிரிப்பு
வாழ்க்கைக்குப் பலமானதே
அப்பாவி உங்கள் மனசு
சுத்தமென்றால் தினமும் சிரிக்கவும்
கவலை நேரங்களில் கூட
கனவாக மாறாது

**ஜீ.கே. இந்திக்கா குமுதினி**
அம்/உஹன மகா வித்தியாலயம்

## சந்தோசம்

உங்கள் பாசம் மனது
என்ற கங்கையில்
மலராய் பூத்தது
தமிழ் சகோதரர்களினதும்
உறவைக் கண்டு
வெரும் வானம் கூட
ஆனந்தக்
கண்ணீர் விட்டது

**சந்தன புஷ்பகுமார**
அம்/உஹன மகா வித்தியாலயம





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறுக்கள்கள்

நட்பு பழசாகாது
தொலைவிலிருந்து வந்த
வசந்த காலம் நாம்
**நந்தனீ - நோர்வூட் வித்தியாலயம்**

நீங்கள் சந்தோசமாக இருக்க
ஒற்றுமையைப் பேணுங்கள்
**யசிதரன்**

நான் கேட்பதைத் தர நீங்கள் விருப்பமா!
நீங்கள் கேட்பதை தர நான் விருப்பமா?
நான் கேட்பதோ அமைதி
உங்களிடமிருந்து அது எனக்குக்
கிடைக்குமா?
**நஷ்லியா - ப்ளும்பீல்ட் வித்தியாலயம்**

பலகாலம் தொடர்ந்த நட்புகளும்
உடைந்து போனாலும்
குறுகிய காலத்தில் ஏற்பட்ட இந்த உறவு
எத்தனை காலம் இருக்குமோ!
**எஸ். பத்மா, ப்ளும்பீல்ட்**

வசந்த காலத்தில் பூத்த
பூக்களை ஒத்த நாம் ஒரு போதும்
அழிந்திடாமல்
வாடாமல் இருப்போம்
**சுபா - கணேசன்**

நீங்கள் அமைதியைத் தேட வேண்டும்
அமைதி உங்களை தேடாது
**யோகேந்திரன் - த.வி.**

அமைதி எமது மூச்சு
அவ்வாறு இல்லாது போனால்
நாம் இறந்து விடுவோம்
**பீ. லோகா**



பிறருக்குக் கொடுக்கும்
நாமும் பெறும் அன்பு
பிறர் கொடுக்காத
எம்மிடமும் இல்லாத அமைதி
**அன்ரன்**

அனைவர் மனதிலும்
அன்பு இருந்தால்
அமைதி தோன்றும்
**எஸ். ஜுலி**

குயிலுக்கு இனிய குரல் தந்தது
யாரென்று தெரியாது
எனக்கு அமைதியை
அறிமுகப்படுத்தியது
சாரனியாவே
**யோகராஜா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாசம்

மலை உச்சியில்
மேகத்தால் சூழ்ந்துள்ள
அழகிய இக்கிராமத்திலேயே
இதமான தென்றலுடன் கழித்த
அந்த நாளில்
கண்டேன்
வாழ்க்கையில் சந்தித்த
நண்பர் நண்பிகள்
அன்பால் அரவணைக்க
அமைதி, ஒற்றுமை பலமானது
ஆயுதத்தை தோற்கடித்து
பாசம் பொங்கியதே

**அனுராதபுர வலிசிங்க ஹரிஸ்சந்திர வித்தியால மாணவன்**

# பலதையும் மதிப்போம்

சிங்கள தமிழ் கலாச்சார உறவுகள் பற்றிய ஆராய்ச்சியாளர்
**குணசேகர குணசோம**

பல்லின கோட்பாட்டை நாம் எப்போதும் வரவேற்க வேண்டும். அதுமட்டுமல்ல சகித்துக் கொள்ள வேண்டிய ஒரு கோட்பாடாகும். இயற்கையைப் போலவே சமூகத்திலும் பல்வேறு மாற்றங்களைக் காணலாம். அக்கோட்பாட்டை நிராகரிக்கும் படசத்தில் சமூகத்தின் இருப்பைப் பாதுகாக்க முடியாது. பாணம்பத்துவ என்பது பல்லின கலாச்சார தொடர்பு பற்றிய முன் உதாரணத்துக்குரிய பிரதேசமாகும். அண்மைக் காலங்களில் அத்தொடர்புகள் உடைந்து போனாலும் பல இனங்களைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்த ஒரு பிரதேசமாகும். சிங்களம், தமிழ் இரு மொழிகளையும் பேசும் திறமை அப்பகுதி மூவின மக்களிடமும் இருந்தது. கலாச்சார விழுமியங்களை பாதுகாப்பதில் அவர்கள் விஷேடமாக அக்கறைக் காட்டினார்கள். ஆனாலும், 1983 கறுப்பு ஜுலையின் போது ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான நிலைமை காரணமாக அது மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org